செந்தமிழ்

தொகுதி 79 மார்ச் '85 பகுதி - 1

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை 1.

ஆசிரியர்: என்.எஸ், முத்துமலைச்சாமி பி.ஏ.பி.எல்.

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 613001

தமிழ்நாடு இந்தியா

இதழ் வெளியீடுகள்

செய்திமலர் — திங்களிதழ்	தமிழ்க்கலை—முத்திங்களிதழ்
News Bulletin— திங்களிதழ்	Tamil Civilization - முத்திங்களிதழ்

கட்டண விவரம்

திங்கள் இதழ்			முத்திங்கள் இதழ்		
ஓராண்டு உரு.	5	4 தாலர்	ஓராண்டு உரு.	50	10 தாலர்
மூன்றாண்டு உரு.	12	10 தாலர்	ஐந்தாண்டு உரு	200	40 தாலர்

நூல்கள்	பக்கம்	உரு.
1. தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50 —புலவர் செ. இராசு	356	150
2. கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரையுடன்) —இ.வை அனந்தராமையர் அடிக்குறிப்புடன்	1228	150
3. சங்க இலக்கியக் கட்டுரைகள் —கருத்தரங்கம்	234	30
4. ஆராய்ச்சித் தொகுதி —மு. இராகவையங்கார்	551	100
5. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் —தெய்வச்சிலையார் உரை	324	60
6. தொல்காப்பியம் - நன்னூல் - சொல்லதிகாரம் —பேரா.க. வெள்ளைவாரணர்	474	75
7. நன்னூற் காண்டிகையுரை —ஆறுமுக நாவலர் பதிப்பு	398	65
8. பெரிய திருமொழி உரையும் தமிழாக்கமும் —டாக்டர் தெ. ஞானசுந்தரம்	688	
நூலகப்பதிப்பு		180
பொதுப்பதிப்பு		130

—(தொடர்ச்சி கடைசி உள் அட்டையில்)

செந்தமிழ்

தொகுதி - 79 மார்ச் '85 பகுதி - 1

உள்ளுரை

எண் பொருள் பக்கம்

முன்னுரை

1 ஆயுர்வேத மருத்துவம்
— திரையன் ... 1

2 வினையாலணையும் பெயர்
— டாக்டர். முத்துச்சண்முகன் ... 5

3. ஏலக்காய் — ஒரு மலைபடு பொருள் ... 14

4. பாரதிதாசன் — ஒரு மதிப்பீடு
— பழநி அரங்கசாமி ... 16

5 தீ மிதி வழிபாடு ... 24

6 காப்பியின் கதை ... 26

ஆயுர்வேத மருத்துவம்

—*திரையன்*

நம் இந்திய நாட்டில் பண்டைக் காலந்தொட்டு பயின்று வரப்படும் மருத்துவ முறைகள் குறிப்பாக ஆயுர்வேதம், சித்தம், யுனானி என மூன்று வகைப்படும். இவற்றுள் யுனானி மருத்துவம் முகமதிய மவுல்விகளினால் வளர்க்கப்பட்டதாகும். சித்த மருத்துவமோ செடி, கொடி, மூலிகை ஆகிய இயற்கைப் பொருள்களை மையமாகக் கொண்டு தமிழ் முனிவர்களாலும், சித்தர்களாலும் தோற்றுவிக்கப்பட்டது. ஆயுர்வேத மருத்துவ முறை வடமொழியில் எழுதப்பட்டுள்ள நான்கு வேதங்களுள் ஒன்றான அதர்வண வேதத்தோடு தொடர்பு கொண்டுள்ளதாகும். 'ஆயுர்' எனும் சொல்லிற்கு 'வாழ்க்கைக் காலம்' என்பது பொருள், 'வேதம்' என்பது அறிவு எனவே மனித வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளையும் திரிபு இன்றி உணர்ந்து கொள்ளப் பயன்படும் இதனை ஆயுர்வேதம் என்று அழைக்கின்றனர்.

நோயின் கடுமையினின்று மனிதனைக் காப்பாற்றுவது மட்டுமன்றி, அவனுக்கு நீடித்த வாழக்கையினையும் அளிப்பதே ஆயுர்வேத மருத்துவம் ஆகும். குறிப்பிட்ட ஒரு நோயினைக் கட்டுப்படுத்தும்போது உடலுக்கு வேறு எந்தத் தீங்கையும் விளைவிக்காத தன்மையே இதன் சிறப்பியல்பு ஆகும். இவ்வகையில் அல்லோபதி எனப்படும் ஆங்கில மருத்துவ முறையினை விட ஆயுர்வேதம் உயர்ந்தது என்று கூடச் சொல்லலாம், வடமொழி வாணர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஆயுர்வேதம் அறிவுக்குப் பொருத்தமானது மட்டுமின்றி உடலுக்கும் ஊறு விளைக்காத சிறந்த மருத்துவ முறையாகும். ஆன்மா, பஞ்சபூதங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதே மனித உடம்பு என்று ஆயுர்வேதம் நம்புகிறது. இதனைப்பற்றிய குறிப்புகளை நான்மறைகளுள் ஒன்றாகிய அதர்வண வேதத்திலேயே காண்கிறோம்.

வேத காலத்திலேயே இம்மருத்துவ முறை புழக்கத்தில் இருந்துள்ளது இதனை வளர்த்த மாமுனிவர்கள் உட்கொள்ளுதற்கு மருந்தும், வெளி உடலுக்குப் பூசுதற்குரிய மருந்தும் கண்டு பிடித்ததோடன்றி, அறுவை மருத்துவத்தையும் கடைப்பிடித்துள்ள-

னர். ஆயுர்வேதத்தில் மருந்து பற்றிப் பேசும் பகுதியை ஆத்ரேய சம்பிரதாயம் எனவும், அறுவை மருத்துவத்தை தன்வந்திரி சம்பிரதாயம் என்றும் கூறுகின்றனர். இம்மருத்துவமுறை உடல் தூய்மை உள்ளத்தூய்மை ஆகிய இரண்டினையும் வற்புறுத்துகிறது. நோயாளி தனது உடலுக்கு ஊறு நேராதபடி அன்றாடம் குளிப்பதோடன்றி இறைவணக்கமும் செய்ய வேண்டும்.

நோயாளி அன்றாட வாழ்க்கையில் ஒழுங்கும் சிற்சில நெறி முறைகளையும் தவறாது பின்பற்றவேண்டும். கீழ்த்திசையில் ஞாயிறு தோன்றுதற்கு முன்னரே படுக்கையிலிருந்து எழுந்து விடவேண்டும் முதியோர் ஏழு அல்லது எட்டுமணி நேரத்திற்கு மேல் தூங்கக் கூடாது காலைக்கடன் முடிந்ததும், களங்கமற்ற உள்ளத்தோடு இறைவணக்கம் செய்யவேண்டும் வடமொழி வாணராகிய சுச்ருதர் கருத்துப்படி கழிவுப் பொருளை நீக்கி, தூய்மையான உடலையும். அமைதியான உள்ளத்தையும் எவன் பராமரிக்கின்றானோ அவனே ஆரோக்கியமான வாழ்க்கையினைப் பெறுகின்றவன் என்பதாகும். ஒருவனது நல்ல மனதுக்கு அவன் உண்ணும் உணவும் ஒரு காரணமாகிறது; சாத்துவிக நிலையில் இருப்பவனையும் ராஜஸ குணத்திற்கு மாற்றுவது அதிகமாகக் காரம், புளிப்பு கலந்த உணவு தான் என்று ஆயுர்வேதம் நம்பு-கிறது. புலால் உணவு இயற்கைக்கு மாறானதெனவே காய்கறி உணவினையே ஆயுர்வேதிகள் வற்புறுத்துகின்றனர்

ஒருவன் உண்ணும் மதுவும், அனுபவிக்கின்ற மாதுவும் தாமஸ குணத்தைக் கொடுக்கின்றன உணவு. ஒழுக்கம் நியதி ஆகியவற்றில் தவறும், முறைகேடும் நிகழும்போது மனிதன் உடல், உள்ளம் ஆகிய இரண்டிலும் பாதிக்கப்படுகிறான் அந்நிலையில் தூய்மை, இறைவழிபாடு ஆகிய இரண்டினால் உள்ளத்தையும், மருந்துகளினால் உடலையும் காப்பாற்ற முற்படுவதே ஆயுர்வேத மருத்துவம் ஆகும்.

அறுவை மருத்துவம் (Surgery) இல்லாமை ஆயுர்வேதத்தில் ஒரு குறை என்று பேசப்படுகிறது உயிர்க் கொலையினைக் கண்டித்த ஞானிகளால் வளர்க்கப்பட்டமையின், அறுவை மருத்து-வத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல், காலப்போக்கில் அது

மறைந்து விட்டது. ஆயுர்வேதத்தில் முதல் அறுவை மருத்துவராகப் போற்றப்படுவர் சுச்ருதர் என்ற ஞானியே ஆவர். இம்மருத்துவத்தில் குறிப்பிடப்படுகின்ற சல்யசிகிச்சை' எனப்படுவது அறுவை மருத்துவமே ஆகும். சிகிச்சை நடைபெறுங்காலத்து மருந்து உண்பதேயன்றி உடலை மருந்து பூசி நீவி விடுவதும், எண்ணெய்க் காப்பு அளிப்பதும், இயன்ற அளவு உடற்பயிற்சி செய்வதும் இம்மருத்துவமுறையின் முக்கிய அங்கங்களாகும்.

இற்றைநாள் ஆயுர்வேத மருத்துவர்கள் உடல்வலியினைத் தற்காலிகமாகப் போக்குவதற்கு வலி நிவாரணி (pain killers) மருந்துகளையும், கையினைப்பிடித்து நாடி ஓட்டத்தைக் கணிப்பதற்குப் பதிலாக இதயத்துடிப்புக் கருவிகளையும் (stethoscope) பயன்படுத்துகின்றனர் இருப்பினும் கீழே குறிப்பிடப்படும் பஞ்சகர்ம வைத்திய முறை ஆயுர்வேதத்தின் மிகச்சிறந்த பகுதியாகும். பழங்காலந் தொட்டு பயின்று வரப்படும் பஞ்சகர்ம முறையினைத்தான் கேரளத்தில் ஆயுர்வேத மருத்துவர்கள் பின்பற்றி வருகின்றனர்.

நவர கிழி: மருந்து அல்லது குளிகையினை மெல்லிய வெள்ளைத்துணியில் முடிந்து, அதனை உடலின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒத்தடம் கொடுப்பர். சில சமயங்களில் அரிசிக் குளிகையினை உடலில் ஒத்தடமாகக் கொடுத்து. பின்னர் நோயாளியை படுக்க வைத்தும், உட்கார வைத்தும், அம்மருந்தினை உடல் முழுதும் பூசி உடலினை இருவர் அல்லது மூவர் நீவி விடுவர். மருந்து கலந்த எண்ணெய்க் காப்புக்குப் பின்னர் நோயாளிக்குக் குளியல் நடைபெறும். குறைந்தது ஒரு மணி நேரமாவது நடைபெறும் இந்த முறைக்கே நவர கிழி என்று பெயர். இச்சிகிச்சை மூட்டு வலியினைப் போக்குவதோடு, உடல் முழுதும் சீரான குருதியோட்டத்தை உறுதிப்படுத்தி, உடலுக்கு ஒளியினையும் கொடுக்கும். மிகக்குறைந்த வயதிலேயே வயோதிகத் தோற்றம் உடையவர்கள் இச்சிகிச்சையினை நாடுகின்றனர்.

அன்ன லேபனம்: இது நரம்பு வியாதிகளைப் போக்குவதாகும். இரத்த அழுத்தம் உடையவர்களும், தோல் வியாதி கொண்டோரும் இம்முறையினைப் பின்பற்றுகின்றனர் பக்குவப்படுத்தப்பட்ட அரிசி, பால், பலாக் கஷாயம் போன்றவையே இங்கு மருந்தாகப் பயன்படுகின்றன.

பிழிசல் : வாதம் பித்தம் போன்ற நோய்களினின்று குணம் அடையச் செய்வதற்கு பிழிசல் முறையே சிறந்ததாகும் பக்குவப் படுத்தப்பட்ட எண்ணெய் பசுநெய் ஆகியவைதான் மருந்து. தாய்மைப் பேறு அடைந்தவர்கள் ஒன்பதாவது மாதத்தில் ஓரிரு வாரங்கள் பிழிசல் முறையினைக் கைக்கொண்டால், குழந்தைப் பேறு எளிதாக அமையும்.

சிரோவஸ்தி : மருந்து கலந்த எண்ணெய் தலையில் பூசப்படு-கிறது. முகத்தில் ஏற்படும் வாதம், தூக்கமின்மை, மனநோய் நாவறட்சி, கண்விழிநோய் (glaucoma), நாட்பட்ட தலைவலி யினின்று குணமடைய இம்முறையினைப் பின்பற்றுகின்றனர்.

சிரஸ் ஸேகா அல்லது தாரை : மூலை, கபாலம் மண்டை ஆகிய இடங்களில் ஏற்படும் நோயினைப் போக்குதற்கு மருந்திடப் பட்ட எண்ணெய், பால், மோர், ஆகியவற்றைத் தலையில் தொடர்ந்து ஊற்றுவது ஒரு முறை, டைபாய்டு சுரம் வந்தோருக்கு, தாய்ப்பாலைப் பயன்படுத்தி நிவாரணம் அளிக்கின்றனர்.
சிரோ லேபனா : பச்சிலை, சிற்சில மருந்துச் செடிகள் ஆகிய வற்றைக் கெட்டியான குழம்புபோல் அரைத்து தலையில் அதனைப் பூசுவர். நரம்புத்தளர்ச்சி உள்ளவர்களுக்கு இம்முறை பொருந்தி வராது தூக்கமின்மையைப் போக்கி, சுறுசுறுப்பை அளிப்பதோடு கண்பார்வை மங்காமல் அதனை ஒளி பெறச் செய்வது இம் முறையின் சிறப்பியல்பு ஆகும்.

ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி பன்னெடுங்காலமாக திருவனந்தபுரத்தில் நகர் நடுவண் அமைந்துள்ளது இக்கல்லூரியே அன்றி, தமிழகத்தில் கோவைக்கு அருகில் சிறுமுகை எனுமிடத்-திலும் மலைசூழ்ந்த பகுதியில் கடந்த ஐந்தாண்டு காலமாக தனி யார் துறையில் ஒரு ஆயுர்வேதக்கல்லூரி இயங்கி வருகிறது. ஓரளவு ஆங்கில அறிவும், வடமொழிப் பயிற்சியும் உள்ள மாண-வர்களே இங்கு சேர்ந்து பயிலமுடியும் ஆயுர்வேதம் பற்றிய நுணுக் கமான செய்திகளை அறிந்து கொள்ள வடமொழி அறிவு இன்றி யமையாதது ஆகும்.

வினையாலணையும் பெயர்

டாக்டர் முத்துச்சண்முகன்
இயக்குநர் : புதுவை மையம்.
அனைத்துலகத் திராவிட மொழி-
யியல் கழகம்

இக்காலத் தமிழில் சேய்மைச் சுட்டுப்பெயர்களைத் தலை-யாகக் கொண்ட பெயரடை, கலப்புப் பதிலிப் பெயர்த்தொடராகச் செயற்படுகிறது. இதில், அவன், அவள், அவர், அவர்கள் அது, அவை என்ற சேய்மைச் சுட்டுப்பெயர்கள் தலையாக வரும். பெயரெச்சம் இவற்றை ஏற்கும் அடியாக வரும். பெயரெச்சம் பெயர் கொண்டு முடிந்து, இரண்டும் இணைந்து வருகின்ற தொடர் போன்றதே இதுவும். பெயருக்குப் பதில், இங்குச் சேய்மைச் சுட்டுப்பெயர் வருகிறது.

பெயரெச்ச உருபாகிய இறுதி அகரமும், சேய்மைச் சுட்டின் முதலில் வருகின்ற அகரமும், அடுத்தடுத்து வரும்பொழுது ஒன்று கெட்டுவிடுகிறது. வந்த + அவன் > வந்தவன்; வந்தவள்; வந்தவர்; வந்தவர்கள்; வந்தது; வந்தவை என வருதல் காண்க. இவற்றைப் பெயரெச்சத்தோடு -வன், -வள், -வர், -வர்கள், -து, -வை என்னும் திணை, பால், எண் உருபுகள் இணைந்து பெறப்பட்டன என்றும் கூறலாம். அவன், இவள் என்னும்பொழுது அ-வன்; இ-வன்; அ-வள்; இ-வள் என இவ்வுருபுகள் வருதல் காண்க, இங்கு நாம், பெயரெச்சத்தோடு சேய்மைச் சுட்டுப்பெயர்கள் இணைந்து உருவாகியதே வினையாலணையும் பெயர் எனக் கொள்வோம்.

வினையால் அணையும் பெயர்களின் இரண்டு தன்மைகளை இங்கு நாம் விளக்குவோம்.

(1) வினையாலணையும் பெயரின் தலைப்பெயரின் மூலம் ஒன்று.

(2) அப்பெயர், அது சார்ந்திருக்கும் பெயரடை வாசகத்தோடு கொண்டிருக்கும் வேற்றுமைத்தொடர்பு மற்றொன்று.

முதலில் தலைப்பெயரின் தோற்றத்தைக் காண்போம். தலைப்பெயர் அந்தாதி யாகவும் (anaphoria), ஆதியாகவும்

(non-anaphoria) வரலாம். அந்த இடத்தில் - அதே வாக்கியத்திலோ அல்லது பொருளால் தொடர்புடைய முன்னைய வாக்கியத்திலோ வந்த முன்னோடிப் பெயருக்கு (antecedent) மாற்றாக இத்தலைப் பெயர் வருமாயின், அதனை அந்தாதி சுட்டுப்பெயர் என்போம் எதுவும் இல்லாமல் வினையாலணையும் பெயரிலுள்ள சுட்டுப்பெயர் வருமாயின் அதனை ஆதி சுட்டுப்பெயர் என்போம்

1- இக்கால எழுதும் தமிழின் இலக்கண அமைதியையே இங்கு விளக்குகின்றோம்.

1. நேற்று முருகன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தான். இருந்தவன் திடீரென்று மாரடைப்பால் இறந்து போனான்.

இருந்தவன் என்பதிலுள்ள சுட்டுப்பெயர், முன்னோடிப்பெயர் முருகன் என்பதன் மாற்றாக வருகிறது இதுவே அந்தாதி சுட்டுப்பெயர்.

ஆதி சுட்டுப்பெயரின் முன்னோடிப்பெயர், புதை வடிவில்தான் கிடைக்கும். புதை வடிவில் வரும் பொதுநிலைப் பெயர்த்தொடரின் மாற்றாக அது அமையும்.

2. நேற்று இங்கே வந்தவன் யார் ?

இங்கு வினையாலணையும் பெயர்த்தொடர் நேற்று இங்கே வந்தவன் என்பது. இது ஒரு பொதுநிலைப் பெயர்த்தொடர். இது ஆதி சுட்டுப்பெயரைக் கொண்டது இதற்கு முன்னோடி முன்னைய வாக்கியங்களில் இல்லை இதன் தோற்றத்தைக் காண்போம்.

3 நேற்று ஒருவன் இங்கே வந்தான்.

3 வது வாக்கியம், 2-வது வாக்கியத்தின் புதை வடிவம். ஒருவன் என்பது பொது நிலைப்பெயர். இவ்வாக்கியத்தைப் பெயரெச்சத் தொடராக மாற்றுகிறோம்.

4. நேற்று இங்கே வந்த ஒருவன்,

இதில் ஒருவன் என்பதற்குப் பதில், அவன் என்பதைப் பெய்து, நேற்று இங்கே வந்தவன் என்ற வினையால் அணையும் பெயர்த்தொடரைப் பெறுகிறோம். இங்கு இவன் என்பது ஆதித்தலைப் பெயர்.

எனவே முன்னோடி இல்லாத வினையாலணையும் பெயர், புதை வடிவில் உள்ள பொதுநிலைப் பெயர்த்தொடரிலிருந்து மாற்றுவிதிகளால் கிடைக்கிறது. இதற்குப் புதை வடிவில, ஒருமைக்கு ஒருவன் (ஒருத்தன), ஒருத்தி, ஒருவர், ஒன்று, எதோ என்பனவும், பன்மைக்குச் சிலபேர் என்பதுய பொதுநிலைப் பெயர்களாக வரும். இப்பெயர்கலைப் பெயரெசசத் தொடரின் தலைப் பெயராக்கி, பின்பு அதற்குப்பதில் உரிய சேய்மைச்சுட்டுப் பெயரினைக் கொடுக்கிறோம. அப்பொழுது வினையாலணையும் பெயர் கிடைக்கிறது.

மேலும் ஒரு எடுத்துக்காட்டைக் காண்போம்.

5. நான் மத்தியானம் சாப்பிட்டது நன்றாக இல்லை.

இங்கு வினையாலணையும் பெயர்த்தொடர், நான் மத்தியானம் சாப்பிட்டது என்பது. இதனை

6 நான் மத்தியானம் எதோ / ஒன்று சாப்பிட்டேன்.
என்ற புதை வடிவிலிருந்து பெறுகிறோம்.

ஆறாவது வாக்கியத்தைப் பெயரெச்சத் தொடராக மாற்றும்பொழுது

7. நான் மத்தியானம் சாப்பிட்ட ஒன்று.

என்பது கிடைக்கிறது. இப்பொழுது ஒன்று என்பதற்குப்பதில், அது என்ற சேய்மைச்சுட்டைக் கொடுக்கும்பொழுது, சாப்பிட்டது என்பது கிடைக்கிறது.

வினையாலணையும் பெயரிலுள்ள சுட்டுப்பெயர் மறுபெயராகச் செயற்படுவதை நான்கு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று முன்னோடிப்பெயருக்கு மறுபெயராக வருவது. மற்றொன்று முன்னோடிப் பெயர் போன்ற மற்றொன்றற்கு மறுபெயராக வருவது.

அப்பெயர் அங்கு இருப்பதில்லை. மூன்றாவது, பேசுபவருக்கும் கேட்பவருக்கும் தெரிந்த பொதுவான ஒன்றற்கு மறுபெயராக வருவது. நான்காவது, பொருளைச் சுட்டுவது.

முதல் வகை

சுட்டுப்பெயர் முன்னோடிப்பெயரைச் சுட்டி அதற்குரிய மறுபெயராக, வினையாலணையும் பெயரில் வரும்.

8. நமது குமார் ஜெயிலிருந்து தப்பிவிட்டான், இப்பொழுது மறுபடியும் ரோட்டில் சுற்றுகிறவன் ஏற்கெனவே இன்னொரு திருட்டில் சம்பந்தப்பட்டவன்.

இப்பொழுது, சுற்றுகிறவன் என்பதில் உள்ள அவன் என்ற சுட்டுப்பெயர், நமது குமார் என்பதற்கு மறுபெயர். இரண்டும் குறிப்பது என்றே.

பொதுவாக வினையாலணையும் பெயர்த்தொடர்களில் வருகின்ற சேய்மைச் சுட்டுப் பெயர், முன்னோடிப் பெயர்த் தொடரில் வருகின்ற பெயருக்கு மாற்றாக வரும். அப்பெயருக்கு அடையாக வருவன, வினையாலணையும் பெயர்த்தொடரிலும் அடையாக வரும். கீழே உள்ள எடுத்துக்காட்டைக் காண்க.

9. அ. நேற்று வந்த பையன் யார்?

ஆ. நேற்று வந்தவன் என் தம்பி.

இங்குப் பையன் என்பதன் மாற்றுப்பெயர் அவன் என்பது. வந்த பையன் என்பதன் அடையாகிய நேற்று என்பது, வினையாலணையும் பெயர்த்தொடரிலும் வருகிறது.

இரண்டாவது வகை

முன்னோடிப்பெயர் போன்ற மற்றொன்றற்கு மாற்றுப் பெயராக வரும் இயல்பினைக் காண்போம்.

10) முருகன் போன ஆண்டு ஏற்பாடு பண்ணின கச்சேரியும் இந்த ஆண்டு ஏற்பாடு பண்ணினதும் நன்றாக நடந்தன.

இதில் வருகின்ற வினையால் அணையும் பெயர் பண்ணினது. அது போன ஆண்டு நடந்த கச்சேரியைச் சுட்டவில்லை அதுபோல இந்த ஆண்டு நடந்த வேறொன்றைச் சுட்டுகிறது. ஆனால் கச்சேரி என்ற பெயர் அங்கில்லை. இதற்கு மேலுமோர் எடுத்துக்-காட்டு.

11) நேற்று வந்த கடிதத்தைப் படித்தேன். இன்று வந்ததை இன்னும் நான் பிரிக்கவில்லை.

மூன்றாவது வகை

வினையாலணையும் பெயர் வருகின்ற வாக்கியத்திலோ அல்லது அதற்கு முந்திய வாக்கியத்திலோ முன்னோடிப்பெயர் வருவதில்லை. பேசுபவர் அவர் கருத்தில் இருப்பதை வினையாலணையும் பெயரின் சுட்டுப்பெயரால் குறிப்பிடுகிறார். அது பேசுபவருக்கும் கேட்பவருக்கும் தெரிந்திருக்கும்.

12) நீங்கள் இதுவரையிலும் கேட்டது டெல்லி அஞ்சல்.

இங்கு, பேசுபவர் குறிப்பிட்ட வானொலி நிகழ்ச்சி - செய்தியோ, நாடகமோ எதுவாயினும் சரி, கேட்பவருக்கும் பேசுபவருக்கும் தெரிந்த ஒன்றாக இருப்பதைக் கருதி, அதை விளக்கும் முறையில் இதுவரையிலும் என்ற அடையால், கேட்டது என்ற வினையால் அணையும் பெயரை விளக்கி முடிக்கின்றார். கேட்கப்பட்டது ஒரு ரேடியோ நாடகமாக இருப்பின், அது என்னும் தலைப்பெயர் அந்நாடகத்தையும், செய்தியாயின் அதனையும், இவ்வாறே பிறவற்றையும் குறிக்கும். ஆனால் எப்பெயரும் முன்னோடியாக இருப்பதில்லை.

நான்காவது வகை

இறுதியாக, சுட்டுப்பெயர் புறத்தே இருக்கும் பொருளை அது இடம், காலம் எதிலும் இருக்கலாம், சுட்டி வருவது. முன்னோடியாகப் பெயர் எதுவும் இல்லை. முன்பு கூறிய ஆதி சுட்டில் பொருள் முன்னே இருப்பதில்லை. இங்குப் பொருள் முன்னே இருக்கும்.

13) இவர் சாப்பிடுவது என்ன?

இங்குச் சாப்பிடுவது என்பது, சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொருளைக் குறிக்கும் இதற்கு முன்னோடிப்பெயர் எதுவும் இல்லை

இதுவரையிலும் வினையாலணையும் பெயரைப் பற்றிக் கூறியவற்றைத் திரட்டிக் காண்போம்.

1) வினையாலணையும் பெயர், பெயரெச்சமும் சேய்மைச் சுட்டும் அம்முறையே இணைந்த கலப்பு மாற்றுப் பெயர்த்தொடர்.

2) வினையாலணையும் பெயர் முன்னோடிப்பெயர் பெற்றும் வரலாம்; பெறாமலும் வரலாம். முன்னோடி இருக்குமாயின் அதில் உள்ள சேய்மைச் சுட்டுப்பெயர், அம்முன்னோடியைச் சுட்டி வரும். அம்முன்னோடி, பெயர்த்தொடராகவோ அல்லது அதன் மாற்றுப் பெயராகவோ இருக்கலாம்.

3) வினையாலணையும் பெயர் முன்னோடி இல்லாமலும் வரலாம். அப்பொழுது முன்னோடி புதைவடிவில் பொதுநிலைப் பெயர்களாக இருக்கும்.

4) சுட்டப்படுவது பேசுபவருக்கும், கேட்பவருக்கும் தெரிந்த ஒன்றாக இருக்கலாம்.

5) வினையாலணையும் பெயர், முன்னோடிப்பெயர் இல்லாமல் புறத்தே இருக்கும் பொருளைச் சுட்டியும் வரலாம்.

இனி இரண்டாவது இயல்பாகக் கூறப்பட்ட, தலைப் பெயருக்கும் அது சார்ந்திருக்கும் பெயரெச்சத்திற்கும் இடையில் உள்ள வேற்றுமைத் தொடர்பினைக் காண்போம். பெயரடைத் தொடர்களில் பெயரடைக்கும் அதன் தலைப்பெயருக்கும் இடையில் இருப்பது போன்ற வேற்றுமைத் தொடர்புகள் இங்கும் இருக்கின்றன. இத்தொடர்புகளை இங்கு விளக்குவோம்.

எழுவாய் வேற்றுமை

14) அங்கே படிக்கின்றவர்களிடம் விசாரித்தேன்.

படிக்கின்றவர்கள் என்ற வினையாலணையும் பெயர், இட-வேற்றுமை உருபேற்று வந்திருக்கிறது. படிக்கின்ற என்ற பெயரடையும், அவர்கள் என்ற சுட்டுப்பெயரும் எழுவாய் வேற்று-மைத் தொடர்புடையன. இதன் புதைவடிவை

15) சிலர் அங்கே படிக்கின்றார்கள்.

என்று கூறலாம்.

சிலர் என்பது படித்தலின் எழுவாய். அதற்கு மாற்றாக அவர்கள் என்ற சுட்டுப் பெயர் வினையால் அணையும் பெயரில் வருகிறது.

ஐ. வேற்றுமை — செயப்படுபொருள்

16) நான் நேற்று பார்த்தவன் என் நண்பன் முருகன்.

இங்குப்பார்த்தவன் என்பது நான் நேற்று ஒருவனைப் பார்த்தேன் என்பதிலிருந்து மாற்றும் விதிகளால் வந்தது. ஒரு-வனை என்பது ஐ வேற்றுமை பெற்று வந்திருக்கிறது. அதன் மாற்றுப்பெயரே வினையாலணையும் பெயரில் உள்ள அவன் என்பது.

ஆல் வேற்றுமை — கருவிப்பொருள்

17) நான் காய்கறி வெட்டினதைக் காணோம்.

இங்குக் காய்கறி வெட்டிய கருவியைக் காணோம் என்கிறார்; நான் எதாலோ காய்கறி வெட்டினேன் என்பதில் வருகின்ற எதாலோ என்பதன் மாற்றாக வெட்டினது என்பதில் உள்ள அது வருகிறது. எதால் என்பதில் ஆல் கருவி வேற்றுமை உருபு

கு வேற்றுமை

18) நான் கடன் கொடுத்தவன் இங்கே வருகிறான்.

கொடுத்தவன் என்பது நான் ஒருவனுக்குக் கடன் கொடுத்தேன் என்பதிலிருந்து வந்தது. ஒருவனுக்கு என்பது கு வேற்றுமையது. மேலும் ஓர் எடுத்துக்காட்டு — உடைமைப் பொருளில்,

19) ஒன்றும் தெரியாதவன் மாதிரி நடிக்கிறான்.

தெரியாதவன் என்பது, ஒருவனுக்கு ஒன்றும் தெரியாது என்பதிலிருந்து வந்தது. ஒருவனுக்கு, என்பது கு வேற்றுமைப் பொருளது.

இல் வேற்றுமை — இடப்பொருள்

20) நான் அங்கு உட்கார்ந்ததில் புது பெயிண்ட் அடித்திருக்கிறார்கள். உட்கார்ந்தது என்பது நான் எதிலோ உட்கார்ந்தேன் என்பதில் இருந்து வந்தது. எதிலோ என்பது இல் வேற்றுமைப் பொருளது.

இலிருந்து வேற்றுமை - நீக்கல் பொருள்

21. நான் விழுந்ததிலிருந்து என் தம்பியும் விழுந்தான்.

விழுந்ததிலிருந்து என்பது நான் எதிலிருந்தோ விழுந்தேன் என்பதில் இருந்து கிடைக்கிறது. அது நீக்கல் பொருளில் வரும் வேற்றுமை.

அஃறிணை வினையாலணையும் பெயரும் தொழிற்பெயரும்

அஃறிணை வினையாலணையும் பெயரும், தொழிற்பெயரும் உருவால் ஒன்று போல் உள்ளன. இவ்விரண்டையும் வேறுபடுத்திக் காணவேண்டும்.

22. நீங்கள் சமையல் செய்தது நல்லது.

இந்த வாக்கியம் மூன்று வகையான பொருளைத் தரவல்லது.

சமைக்கும் தொழில் நல்லது என்று பாராட்டுவது.

(2) ஒருவர் (இங்கு நீங்கள்) செய்த சமையல் தொழில் நல்லது எனப்பாராட்டுவது.

(3) சமைத்த — சமைக்கப்பட்ட பொருள் நல்லது எனப் பாராட்டுவது.

முதல் இரண்டு பொருளிலும் செய்தது என்பது தொழிலுக்குப் பெயராக வருகிறது. அது என்பது அத்தொழிலைக் குறிக்கும்

பெயர். மூன்றாவது பொருளில் அது என்பது சமைக்கப்பட்ட பொருளைச் சுட்டி வருகிறது முதல் இரண்டு பொருளிலும், செய்தது. தொழிற்பெயர், அது ஒரு செயலை அல்லது நிகழ்ச்சியைக் குறிக்கிறது. அந்த நிகழ்ச்சி அருவமானது. இங்கு அது சமைத்தல் தொழிலைக் குறித்து வருகிறது. அத்தொழில் நல்லது. வினையாலணையும் பெயரில், அது, சமைக்கப்பட்ட பொருளைக் குறிக்கும் வினையாலணையும் பெயரில். சமைத்ததைச் சாப்பிட்டேன் என்று கூறமுடியும் சாப்பிட்டேன் என்ற வினை வரும் பொழுது அது வினையாலணையும் பெயராகவே இருக்கும். இங்குச் சமைத்தது தொழிற்பெயராக இருக்க முடியாது. அதைப் போலவே சமைத்ததைப் பார்த்தேன் என்னும்பொழுது, சமைத்தது தொழிற்பெயராகவும் இருக்கலாம்; வினையால் அணையும் பெயராகவும் இருக்கலாம். சமைத்தது நிகழ்ந்தது; சமைப்பது நிகழாது; சமைப்பது நடக்காது என்பது போன்ற வினைகள் வரும்பொழுது சமைப்பது தொழிற்பெயராகத்தான் பொருள்படும்.

வினையாலணையும் பெயர் அருவப்பொருளாகவும் வரமுடியும்; உயர்திணைக்கும் வரும்

23. நீ நேற்றுப் பார்த்தது என் தம்பி மகன்,
இங்குப் பார்த்தது என்பது உயர்திணைப் பாலாகிய தம்பி மகனைக் குறிக்கிறது.

24. இங்கு வந்தது என் நண்பனாக இருக்கவேண்டும்.
இங்கும், வந்தது என்பது நண்பனைக் குறிப்பதால் அது வினையாலணையும் பெயராதல் வேண்டும்.

உயர்திணைப்பெயர்ப் பெயர்ப் பயனிலையாக வரும் பொழுது, அஃறிணை வினையால் அணையும் பெயர் அதனைச் சுட்டி வரமுடியாது. அதுவும் உயர்திணையாகவே இருக்க வேண்டும்.

25. * இங்கு நிற்கிறது { நேற்று வந்தவன் / நல்லவன் }

இந்த வாக்கியம் பொருந்தாது இது

26. இங்கு நிற்கிறவன் { நேற்று வந்தவன் / நல்லவன் }

என்று வரலாம். இது பொருந்தும்.

ஏலக்காய் - ஒரு மலைபடு பொருள்

இனிப்புப் பண்டங்கள், பொங்கல், ரொட்டித் துண்டுகள் ஆகிய வற்றில் மட்டுமேயன்றி, தாம்பூலத்திலும் சிறிய அளவாகக் கலந்து சுவைக்கப்படும ஏலக்காய் மிகுந்த மணமும் சுவையும் மிக்க ஒரு உணவுப் பண்டமாகும். உலக முழுதும் விளைவிக்கப்படும் ஏலத்தில் முக்கால் பங்குக்கு மேலே இந்தியாவில விளைகிறது. டான்சானியா, இலங்கை, லாவோஸ், கம்போடியா, நியூகினி, எல்சால்வடார் போன்ற ஆப்பிரிக்க, அமெரிக்க நாடுகளில ஏலக்காய் ஓரளவே விளைந்தாலும், அந்த ஏலத்தின் மணமும் குணமும் இந்தியாவில் விளைவிக்கப்படும் ஏலத்தைப்போன்று தரமாக இருப்பதில்லை. எனவே உலக நாடுகளில் இந்திய ஏலததிற்கு மிகுந்த மதிப்பு உள்ளது

இந்தியாவிலும் தென் மாநிலங்களான கேரளம், கர்நாடகம். தமிழ் நாடு ஆகியவற்றிலேயே மலைப்பகுதிகளில் ஏலம் பயிரா கிறது. ஏலத்தில் எழுபதுக்கு மேற்பட்ட வகைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தியர்களைப் போலன்றி, அன்றாடம் காலை யில் பருகும் காப்பியிலும் ஏலத்தைப் போடுகின்ற பழக்கம் அராபிய நாடுகளில் இருக்கிறது அந்நாடுகளில் காப்பித்தூளையும், ஏலப் பொடியினையும் நன்றாகக்கலந்தே காலைக்காப்பி தயாரிக்கப்படு கிறது. காவா என்று அழைக்கப்படும் இப்பானத்தில் பால் கலக்கப்-படுவதில்லை. கடுமையான வெப்பம் உள்ள இப்பாலைவன நாடுகளில் உடல வெப்பத்தை மிதமான நிலையில் வைத்துக் கொள்வதற்கும், உண்ணும் உணவு செரிப்பதற்கும் இப்பானம் இன்றியமையாதது என்று கருதுகின்றனர். இதுமட்டுமின்றி, இனிப்புப் பண்டங்களிலும், ரொட்டி, கேக், போன்றவற்றிலும் அராபிய நாடுகளில் ஏலப்பொடி யினைக் கலக்கின்றனர். எனவே ஏலத்தின் பெரும்பகுதி சவூதி அரேபியா, குவைத் போன்ற வளைகுடா நாடுகளுக்கே ஏற்றுமதியா கிறது, பெட்ரோலிய வளம் மிகுந்த இந்த நாடுகளில் பணத்துக்குப் பஞ்சம் இல்லை. எனவே எந்த விலை கொடுத்தாயினும், விரும்பிய பொருளை வாங்கும் சக்தி இந்நாடுகளில் இருப்பதனால், ஏலத் தின் விலையும் கிலோ ரூபாய் இருநூறில் தொடங்கி மேலே ஏறிக்கொண்டே போகிறது.

வாசனைப் பொருளான ஏலம் உணவுப்பொருளோடு மட்டு-மன்றி, மருந்துகளோடும் சேர்க்கப்படுகிறது வயிற்றுப் பொருமல், அமிதமான சிறுநீர்ப்போக்கு. வாந்தி, குமட்டல் ஆகிய சிறுநோய் களைப் போக்குவதில் ஏலம் இன்றியமையாத மருந்துப்பொருளாக விளங்குகிறது. இதய நோய்களையும் கண்டிக்கும் என்பதோடு சிற்றி ன்ப நுகர்ச்சியையும் தூண்டும தன்மை ஏலத்திற்கு உண்டு என்று சொல்லப்படுகிறது. மத்தியப் பிரதேச மாநிலத்தில் வீடுகளில் விருந்தினருக்கு வெற்றிலை பாக்கு வழங்கும்போது, பசிய ஏலக்-காய் ஒன்றனையும் சேர்த்துக் கொடுப்பது மரபு.

உலகக் சந்தையில் இந்திய நாட்டு ஏலக்காய்களுக்குப் போட்டியாக குவாடிமலா, டான்சானியா நாட்டு ஏலங்களே அதிக விலைக்கு விற்கப்படுகின்றன எனவே வெளி நாடுகளுக்கு ஏற்று-மதியாகும் ஏலத்தின் தரம் குறையாமல் பார்த்துக் கொள்ளுவது இன்றியமையாத பணியாகும். இந்திய அரசு ஏற்படுத்திய ஏலக் காய் ஏற்றுமதிக் கழகம் இப்பணியினைத் திறம்படச் செய்வதோடு சென்ற நிதியாண்டில (1983-84) ஏலம் விற்பனையில் 42 கோடி ரூபாய்க்கு மேல் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தந்துள்ளது. ஏலப்பயிரின் வளர்ச்சிக்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் கொடுக்-கின்ற இந்திய ஏலக்காய் ஆராய்ச்சிக்கழகம் கேரளத்தில் மயிலாடும் பாறையில் நிறுவப்பட்டுள்ளது.

காய்ச்சலும் நன்றே

இலேசான காய்ச்சலைக் கட்டுப்படுத்த உயிர்க் கொல்லி (Anti - biotics) மருந்துகளை உண்ணக் கூடாது என்பது இற்றை நாள் மருத்துவர்களின் கருத்து. ஏதேனும் தீங்கு விளைக்கும் கிருமி உடலுக்குள் புகுந்து விட்டால், உடலில் இயல்பாகவே இருக்கும் எதிர்ப்பு சக்தி வேலை செய்யத் தொடங்கி விடும். அப்போது உடலில் சுரக்கும் ஒருவகை நிணநீர் (Endogenous pyrogen) இலேசான காய்ச்சலுக்குக் காரணம் ஆகிறது. இதனைத்தானாகவே குணம் அடைய விடுதல் நல்லது ஆனால் ஒரு எச்சரிக்கை. முதியவர்கள், நெஞ்சுவலி உடையவர்கள், கைக்குழந்தைகளுக்கு இந்த நியதி பொருந்தாது. இவர்களுக்குக் காய்ச்சல் கண்டு, அதனைக் கட்டுப்படுத்தாமல் விட்டால், ஜன்னி, இசிவு, இழுப்பு ஆகியன நேர்ந்து விடலாம்.

பாரதிதாசன் - ஒரு மதிப்பீடு *

— பழநி அரங்கசாமி

பாரதிதாசன் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞர். எழுபத்திமூன்று ஆண்டுகள் வாழ்ந்தவர் என்பது நடைமுறை உலகத்தின் காலக்கணிப்பு. கவிஞர்கள் இறவாதவர்கள். தோன்றி மறையும் பல்லாயிரக்கணக்கான மனித உள்ளங்களில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அவர்கள் விட்டுச் சென்ற கவிதைச் சொத்தோ வெள்ளத்தால் அழியாதது வெந்தணலால் வேகாதது. கள்ளத்தால் நெருங்கொணாத கருத்துப் பேழை. கவிஞன் இறப்பதில்லை என்ற நியதிக்குப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் விதிவிலக்கல்ல மரணப்படுக்கையில் விழுந்து மண்ணுக்கு விடை கொடுப்பதற்குச் சில திங்கள் வரை படைப்புக் கவிதைகளையும், மொழி பெயர்ப்புகளையும் வெளியிட்ட பெருமை ஜான் ட்ரைடன் என்னும் ஆங்கில நாடகக் கவிஞனுக்கு உண்டு. கடைசிமூச்சு இழையோடிக் கொண்டிருக்கும் காலம் வரை அவனது சிந்தனை சிதறவில்லை. இதுபோன்றே சென்னை மருத்துவமனையில் நலிவுற்றுக்கிடந்த போதும் தெளிவாகப் பேசிக்கொண்டிருந்தவர் கவிஞர். 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்று தொடங்கிய இளைஞன் சுப்புரத்தினத்தின் கவிதைக்குரல் 72 -ஆம் வயதில் இளையோர் ஆத்திசூடி வெளியிடுகின்ற வரையில் ஓயவில்லை நாச்செற்று விக்குள் மேல் வருகின்றவரை தீர்க்கமான சிந்தனையும் மொழி வளர்ச்சியில் அக்கறையும் கொண்டிருந்தவர் பாவேந்தர்.

கவிஞரது வாழ்க்கை பல்வேறு திருப்பங்களைக் கண்டிருக்கிறது. முப்பத்து ஐந்து வரை பாரம்பரியத் தமிழ்ப்புலவர். பழுத்த ஆத்திகர். குன்றுதோறாடும் குமரவேளின் பெருமையினை சுப்பிரமணியர் துதியமுது என்று ஒரு சிறு நூலாகவே பாடியுள்ளார். பிரெஞ்சுக்காரரின் ஆளுகையில் இருந்த புதுவையில் பிறந்தவர் கவிஞர். இருப்பினும் தமது நாற்பதாவது ஆண்டு வரை தேசீயக் கண்ணோட்டத்தை மையமாகக் கொண்ட இந்தியக் குடிமகனாக விளங்கியவர். நாட்டு விடுதலைப் போரில் பங்கேற்று தொண்டருக்குத் தொண்டனாய், கதர்த்துணியைத் தலையில் சுமந்து கால் கடுக்க நடந்து விற்றிருக்கிறார். சத்தியாக்கிரகப் போராட்டத்தில் முன்னணியில் நின்று இளமையிலேயே சிறை சென்றவர். சிறுவர் சிறுமியர்க்கேற்ற தேசீய கீதங்களையும் நாட்டுத் தொண்டர்கள் நடைபோட்டுப் பாடுவதற்கேற்ற நல்ல தமிழ்ப் பாடல்களையும், கதர் இராட்டினப் பாட்டுகளையும் எழுதி வெளியிட்டவர். தேசீயத்

---

* திருச்சி வானொலியில் (12-8-84) ஒலிபரப்பாகியது. அனுமதியோடு வெளியிடப்படுகிறது.

தொண்டில் இப்படித் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட கவிஞர், ஈ. வே. ரா பெரியாருடன் சேர்ந்து தன்மான இயக்கத்தில் தொடர்பு கொள்ளும்போது நாத்திகராகிறார். 1933-ஆம் ஆண்டில் சென்னையில் நாத்திகர் மாநாட்டில் தம்மையும் ஒரு நாத்திகனாகப் பதிவு செய்து கொள்கிறார். இவ்வாறு பல்வேறு திருப்புமுனைகளைக் கொண்ட புதுவைக் கவிஞரின் 73-ஆண்டு கால வாழ்க்கையினை நறுக்குத் தெறித்தாற்போல் நான்கு வரி ஆசிரியப்பாவில் எடுத்துக்காட்டியுள்ளார் கவிஞர் சுரதா அவர்கள்.

''பங்காருப் பத்தரிடம் பயின்று மீசைப்
பாரதியைப் பின்பற்றி நடையை மாற்றிச்
சிங்கார வேலவனைப் பாடிப் பின்னர்ச்
சீர்திருத்தத் துறைகண்டு பெரியாருக் கோர்
நங்கூரம் போன்றிருந்து பிரிந்து காஞ்சி
நல்லறிஞர் கழகத்தாற் பெருமை பெற்றுத்
தங்காமல் விரைந்தோடும் நீர்போல் ஓடித்
தரித்திரத்தில் சரித்திரத்தை முடித்துக்
கொண்டார்''

பெரியாரின் தலைமையில் தன்மான இயக்கத் தொடர்பு இருந்தாலும், புதுவைச் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருப்பினும் அரசியல்வாதிகளுடன் நீடித்த தொடர்பிருந்தாலும், பாரதிதாசன் ஒரு முழு நேர அரசியல்வாதி அல்லர். அவர் ஒரு தனித் தமிழ்க்கவிஞர். ஏற்றுக் கொண்டிருந்த கொள்கையிலும், கருத்துகளிலும், அரசியல் போக்கிலும் அவரிடம் சிற்சில மாறுபாடுகளைக் காணலாம். ஆனால் அவரது பேனாமுனை தனது படைப்புத் தொழிலாகிய கவிதைப் புனைவை எந்தக்காலத்திலும் நிறுத்திக் கொண்டதில்லை. இடைவாத அந்த இலக்கியப்பணி அவர் மண்ணுலகை விட்டு மறைகின்ற வரை மாறாது நடந்து கொண்டேயிருந்தது.

பாவேந்தர் பாட்டியற்றும் திறனை இளமையிலேயே பெற்றிருந்தவர். தமிழ்வித்வான் பட்டம் பெற்ற கனக. சுப்புரத்தினம் தமது பதினேழாவது வயதில் புதுவையில் ஒரு திருமண நிகழ்ச்சியில் பாரதியாரைச் சந்திக்கிறார். பாரதியின் எளிய தமிழும் முற்போக்குக் கொள்கையும் இந்த இளங்கவிஞரை ஈர்த்து விட்டது.

இக்கவிஞரால் முதன்முதலாக இசைக்கப்பட்ட எங்கெங்கு காணி-னும் சக்தியடா ஏழுகடல் அவள் வண்ணமடா என்று தொடங்கும் பாடல் முதன் முதலாக பாரதியாரால் அறிமுகப் படுத்தப் பட்டு சுதேசமித்திரன் இதழில் வெளிவந்தது அன்று தொடங்கிய எழுத்-துப்பணி ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் காப்பியப் பாட-ல்கள், தன்னுணர்ச்சிப்பாடல், கதைப்பாடல்கள், நாடகம் உரை-நடை, கவிதை என்றின்ன பல்வேறு இலக்கியப்படைப்புகளாக வெளிவந்துள்ளன

காப்பியப் பாடல்

பிற மொழி கலவாத இனிக்கும் தமிழில் எழுதப்பட்ட காதலா, கடமையா ஒரு சிறந்த காப்பியப்பாடல் நாட்டு விடு-தலைக்குத் தங்கு தடையின்றித் தியாகம் செய்ய வேண்டும் என்-பதே அக்காப்பியத்தின் கரு. காதலின் மேம்பாடும் கடமையின் உணர்வும் சுட்டிக்காட்டப்படுகின்ற இச்சிறு காப்பியத்தில், தேவைப்-படுங்காலத்து காதலைத் துறந்தேனும் கடமையினைச் செய்தல் வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது. கடல்மேற்குமிழி என்-னும் சிறு நூலில் கலப்பு மணமும் சாதி ஒழிப்பும் தான் முக்கிய குறிக்கோள். அரசகுலத்தையும் அல்லாதாரையும் காதலால் பிணைத்து வைத்து இங்கு ஒரு சமுதாயப் புரட்சி செய்துள்ளார் கவிஞர். பண்டைத் தமிழர்கள் உயிர்களிடம் இரக்கம் கொண்டோர் என்பதை எடுத்தியம்பும் எதிர்பாரா முத்தம் உண்மைக்காதலின் சிறப்பையும் விளக்குவதாகும். பிறர்மனை நோக்காத பேராண்-மையை வலியுறுத்தும் தமிழச்சியின் கத்தி என்பது பிறிதோர் சிறு காப்பியம். இதில் வரும் சுப்பம்மாவின் கற்புநிலை கண்ணகியின் கற்பு நிலையினை ஒத்த வீரக்கற்பாகும். முறைப்படி தமிழிலக்கி-யம் பயின்ற கவிஞரது கற்பனை வளத்தில் உருவாகிய இக்கதா பாத்திரம் சிலம்புச் செல்வியான கண்ணகியை ஒத்துப் படிமம் கொண்டதில் வியப்பில்லை. மூடப்பழக்க வழக்கத்தைக் கண்டிக்கும் ஒரு கற்பனைக் கதையே சஞ்சீவி பர்வதத்தின் சாரல். புராணங்-களும், இயற்கை இகந்த கதைகளும் பாமர மக்களிடையே குருட்-டு நம்பிக்கைகளைத் தோற்றுவிக்கும் என்பது கவிஞரின் கருத்து. வளர்ந்து வரும் சமுதாயத்தில் கண்மூடித்தனமான நம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் தவிர்க்கப்பட வேண்டும் என்றே அவர் கருதினார். தாலாட்டுப்பாட்டில் கூட

'மூடப் பழக்கம் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்க வரும் கற்பூரப் பெட்டகமே'

என்றே குழந்தையைப் பாராட்டுகிறார். மரபுவழிப் புளுகினைத் தவிர்த்து சமுதாயம் மறுமலர்ச்சி அடைய வேண்டும் என்பதே காப்பியக் கருத்து. இக்கருத்தினை இடித்துச் சொல்லுகின்றவள் வஞ்சி. ஆண்மகனே பெண்ணுக்கு அறிவுரை சொல்லுகின்ற மரபில் பெண்மகள் ஆணுக்குப் புத்தி புகட்டுகின்ற ஒரு இலக்கியத் திருப்பு முனையைக் கவிஞர் செய்துள்ளார் என்று கூறலாம். பழங்கால சமுதாயத்தை மனதிற் கொண்டு எதிர்காலச் சமுதாயத்தைக் கணித்துப் பார்க்கும் இனிய காப்பியமே குடும்ப விளக்கு. மங்கலமான தலைப்பைக் கொண்டு விளங்குவது இந்நூல். கணவனும், மனைவியும் கற்றோராக இருக்கவேண்டும் என்கிற இந்நூலில் பெண்கல்வி பல்வகையானும் வற்புறுத்தப்படுகிறது

குழந்தைகள் பள்ளிக்குப் புறப்படுகின்றனர். குளிக்கச்செய்த பின் உடைஉடுத்தி உண்பித்து உரிய நேரத்தில் அவர்களைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டுவது தாயின் கடமை ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே என்று கூறுபவள் புறநானூற்றுத் தாய். இற்றை நாள் பெண்டிர் அப்படிச் சொல்ல இயலாது. பல்வேறு பணிகளைச் செய்து கொண்டிருப்பவன் கணவன். குழந்தைகளைக் கண்காணிப்பதில் முழுநேரத்தையும் அவனால் ஒதுக்க இயலாது. எனவே குழந்தை வளர்ப்பில் இல்லக்கிழத்திக்குத்தான் தலையாய பொறுப்பு இதனை உணர்ந்த இந்த இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் ஒரு வீட்டில் நிகழும் காலைக் காட்சியினை எடுத்துக் காட்டுகிறார். பள்ளிக்குப் போகு முன், குழந்தைகள் தாயின் இருபுறமும் அமர்ந்து உண்ணுகின்றனர். தாய் உணவை மட்டுமா ஊட்டுகிறாள்? அறிவைப்புகட்டுவதும் அவளே. எனவே அவள் ஒரு ஆசிரியை என்றும் கூறலாம் உணவோடு அறிவும் புகட்டப் படுகின்ற அந்த அறையோ கலைபயில் கழகமாகிறது. நடுத்தரக் குடும்பங்களில் அன்றாடம் நடைபெறும் ஒரு காலைக்காட்சியை இருவேறு நோக்கில் காட்டுகின்ற பகுதி இது தான்.

'அவள் வாத்திச்சி அறை வீடு கழகம்
தவழ்ந்தது சங்கத் தமிழ்ச்சுவை
விழுங்கினார் பிள்ளைகள் வேளையாயிற்றே'

பெற்ற குழந்தைக்கு உற்ற பாடம் கற்பிக்க வேண்டுமாயின், தாய் கற்றறிந்தவளாகத் தான் இருக்க வேண்டும். எனவே பெண் கல்வியின் முக்கியத்துவத்தைப் பல காலும் வற்புறுத்திய புரட்சிக் கவிஞர் அதே கருத்தை எதிர்மறை முகத்தானும் வலியுறுத்துகின்றார்.

'கல்வியில்லாத பெண்கள் களர் நிலம்
அந்நிலத்தில் புல் விளைந்திடலாம்
நல்ல புதல்வர்கள் விளைவதில்லை'

குடும்ப விளக்கில் குறிப்பிடத்தக்க பிறிதோர் காட்சியும் உண்டு. இளவயது நம்பியரையும், நங்கையரையும் வைத்தே காதல் ஓவியங்கள் தீட்டப்படுகின்றன. ஆயினும் உண்மையான காதலுக்கு வயதில்லை. முதியோர் காதலும் போற்றத்தகுவதே. இளையோரின் காதல் உடலின் சங்கமம் என்றால், முதியோர் காதல் இதயங்களின் சங்கமம் என்றே சொல்லலாம். எனவே குடும்ப விளக்கில் முதியோர் காதலும் பக்குவமாகப் பாராட்டப்படுகிறது.

கடினமான எந்தப் பொருளையும் தின்னமுடியாத பல்லிழந்து போன முதுமைப் பருவம். முன்னிரவு நேரம். தாத்தா உண்ணுதற்கேற்ற பொரிமாவில் வெல்லம் பிசைந்து யாருக்கும் தெரியாமல் பக்குவம் செய்கிறாள் பாட்டி. அதனை மற்றவர்கள் முன்னிலையில் அவருக்கு எப்படிக் கொடுப்பது? மருமகள், பேரக் குழந்தைகள் இவர்கள் கண்ணிலிருந்து தப்பவேண்டுமே! பொரிமா உருண்டையை மறைத்து வைத்துக் கொடுத்துவிட்டு தாத்தாவுக்கு அருகில் பாட்டியும் படுத்துக் கொள்கிறாள். உள்ளத்தால் இணைந்த இந்த நட்பில் உலக வழக்கில சிந்தித்துப் பார்க்கின்ற உடல் இணைப்புக்கு இடமே இல்லை.

"அருகருகு இருவர்; மிக்க அன்புண்டு
செயலே இல்லை .... "என்பது
கவிஞர் கூற்று

காப்பியங்களோடு சிறப்புற எண்ணத்தகும் சிறப்புடையன உருவகக் கதைப்பாடல்கள் (Allegory) ஆகும். வீட்டுக்கோழியும் காட்டுக்கோழியும் என்பது இவற்றுள் ஒன்று. இதில் வரும் பாத்திரங்கள் பறவைகளே. கோழியைக் கொன்று உணவு சமைக்கும் கொடுமை ஒரு வீட்டுக் கோழியின் வாயிலாகவே கூறப்படுகிறது.

'பிஞ்சுடம்பில் பஞ்சுமயிர் சிரைத்துக்
குருதி கொட்டக் கொட்டக் கூறிட்ட சதையை
நெய்யோடு நெய்யாய் நீர்ப்பதம் எய்தச்
சொய் யெனத் தாளித்துக் குப்பென அருந்துவர்'

விடுதலை வேட்கை என்னும் சிறுநூலில் விலங்குகளே பாத்திரங்-களாகின்றன. ஜார்ஜ் ஆர்வெல் என்னும் ஆங்கில நாவலாசிரியர் மிருகங்களை மட்டும் பாத்திரங்களாகக்கொண்டு கால்நடைப்-பண்ணை (Animal Farm) என்ற பெயரில் ஒரு அங்கத நாவல் எழுதியிருப்பதை ஈண்டு ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும்.

பழைய கதைகளை அடித்தளமாக வைத்துப் புதிய வடி-வத்தில் தமது கருத்துகளைக் கூறுவதற்காகப் பாரதிதாசன் படைத்தநூல்கள் இரண்டு — ஒன்று கண்ணகி புரட்சிக்காப்பியம்; மற்றொன்று மணிமேகலை வெண்பா. முன்னதில் காப்பியநிகழ்ச்சி-யும் போக்கும் மூலநூலினின்று வேறுபட்டுக்காணப்படுகின்றன. ஒரு நிகழ்ச்சியினைச் சான்று காட்டலாம். கண்ணகி வானூர்தியில் சென்றாள் என்கிறது சிலம்பு. மலைக்குறவரிடம் குறை கூறி அவள் உயிரிழந்தாள்; அவர்கள் அவளது உடலை அங்கேயே அடக்கம் செய்தனர் என்கிறது புரட்சிக்காப்பியம். பாவடிவத்தால் பெயர் பெற்றது மணிமேகலை வெண்பா என்னும் நூலாகும். மூலநூலின் சில பகுதிகள் விடப்பட்டுள்ளன. அவ்வாறு ''விடுத்த-தன் நோக்கம் அந்தப் பழைய மணிமேகலைக் காப்பியத்தையும் மக்கள் மறவாமல் அடிக்கடி படிக்க வேண்டும்'' என்று கவிஞரே கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தொன்மையான நூலைத்தனக்குத் தோன்றியவாறு ஒட்டியும் வெட்டியும், குறைத்தும், சிதைத்தும் மாற்றி எழுதுவது தவறென்று கூற இயலாது. உலகமெங்கணும் இலக்கியப்படைப்பில் நிலவி வரும் வழக்கம் தான் அது. ஆங்கில நாடகக் கவிஞரான ஷேக்ஸ்-பியரின் லீயர் மன்னன் என்னும் துன்பியல் நாடகத்தின் முடிவு உலக நியதிக்குப் பொருந்துவதன்று. நல்ல குணமுள்ள லீயர் மன்னன் பைத்தியமாவதும், குணவதியான அவனது மகள் கார்-டலியா இன்னலுறுவதும் இயற்கைக்குப் பொருந்துவதன்று; அது வரம்பிகந்த நிலை என்று கூறி பற்பல ஆசிரியர்கள் அந்நாடகத்தை மாற்றி எழுதிவிட்டனர். அத்தோடு ஏறத்தாழ ஒன்றரை நூற்-றாண்டுக் காலம் ஷேக்ஸ்பியரை நாடகமேடையிலிருந்து அகற்றி-

விட்டார்கள். பாரதிதாசனோ அப்படி மூலநூலுக்கு முற்றிலும் முரணாக எதையும் செய்துவிடவில்லை முன்னோன் முடிபொருங்கொத்துப் பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி இற்றைநாள் பகுத்தறிவுக்கேற்ற, காலத்தால் தேவையான சிற்சில மாற்றங்களையும் பக்குவமாகச் செய்து, மக்கள் மூலநூலையும் படிக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்வது பாராட்டத்தக்கதாகும்.

பழங்கதைகளைக் காலத்திற் கேற்றவாறு மாற்றம் செய்யும் இவ்விலக்கியப்பணி கதைப்பாடல்களோடு நில்லாது நாடகங்களுக்கும் செல்லுகிறது புரட்சிக்கவிஞரின் சிறந்த பல நாடகங்கள் தன்மான இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புதற்கென்றே எழுதப்பட்டன; நடிக்கப்பட்டன. கலையும் இலக்கியமும் காலத்தை வென்று நிற்க வேண்டும் என்பது மிக உயர்ந்த குறிக்கோள். கவிஞரைப் பொறுத்தவரையில் அவையிரண்டும் காலத்தின் குரலாகவும் இருக்க வேண்டும் என்பதுவே என்று தோன்றுகிறது. இரணியன் அல்லது இணையற்ற வீரன் எனும் நாடகம் கூர்மபுராணத்தில் வருகிற பிரகலாதன் கதையினை மேலோட்டமாக வைத்துக் கொண்டு இருவேறு இனப் போராட்டங்களைச் சித்தரிக்கிறது. தன்மான இயக்கம் அரசியலுக்கு அப்பால் நின்று ஒரே கூறாக இயங்கியபோது இந்நாடகம் புகழ்பெற்று விளங்கியது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பெரியார் தலைமையில் இந்நாடகம் அரங்கேற்றப்பட்டது. தன்மான இயக்கத்தலைவர்களே அதில் வேடமேற்று நடித்துள்ளனர். தனித்தமிழ் நடையினை ஒரு குறிக்கோளாகக் கொள்ளுதற்கு முன்னரே எழுதப்பட்டதாதலின், அந்நூலில் வடசொல் மிகுதி ஆயினும் பாவேந்தர் அந்நூலை நாடக இலக்கணத்திற்கேற்ப எழுதியுள்ளார். கலப்புமணத்தை ஆதரிக்கும் இந்நூலில் சித்ரபானு என்னும் உயர்குலமங்கை ஒரு தமிழ் மகனைக் காதலிக்கிறாள். பிரகலாதன் என்னும் அத்தமிழ் மகனை அவள் தன்வயப்படுத்தி அவனது தந்தை இரணியனோடு அவனை மோதவிடுகிறாள். தந்தையிடமிருந்து மகனைவேறு படுத்திக் கொண்டு போவதே கதைக்கரு. ஒரு கட்டத்தில் இரணியன் தனது மகன் மீது ஆத்திரங் கொண்டு பேசுகிறான். அந்த இடத்தில் வருகிற சந்தப் பாட்டு டகர ஒலியை மையமாகக் கொண்டு அருவி போல் மடமடவென்று கொட்டுகிறது.

—சிந்தனைக்கு—

ஆங்கில மொழித்தாக்கத்தினால் தமிழ் மொழியின்கண் காணப்படும் சொற்கள் ஏராளம் தாக்கத்தின் பின்விளைவு எது வாயினும், அவற்றின் நுழைவு மறுக்க முடியாதது'

தேன்நிலவு - முதலைக் கண்ணீர் - அறிவு ஜீவிகள் வளர்ந்து வரும் மொழிகள் இத்தகு தாக்கங்கள் தவிர்க்க முடியாதவை.

இப்பகுதியினைப் படிக்கும்போது பழங்கால நாடகமேடைப் பாணி நமக்கு நினைவுக்கு வருகிறது. நாடகமுடிவில் காங்கேயன், இரண்யன், பிரகலாதன் சித்ரபானு சேனாதிபதி ஆகிய அனைவரும் மரணமுற்று மேடையே இரணகளமாகி விடுகின்ற காட்சி கிரேக்க நாடகாசிரிர் செனகா என்பாரை நினைவூட்டுகிறது. செனகாவின் நாடகங்களில் கொலை, வன்முறை. பழிக்குப்பழி போன்றவற்றிற் குப் பஞ்சமே இல்லை,

புரட்சிக் கவிஞரின் பிசிராந்தையார் என்னும் நாடகநூல் சாகித்ய அக்காதெமியின் ஐயாயிரம் ரூபாய் பரிசினைப் பெற்ற தாகும். சௌமியன், சேரதாண்டவம் போன்றவை குறிப்பிடத்தக்க பிற நாடகங்களாகும். பாரதிதாசனின் சிறு நாடகங்கள் அனைத்தும் இரண்டுதொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. சமுதாயத் திருத்தமே இவற்றில் தலையிடம் பெறுகின்றன. சான்றாக கற்கண்டு எனும் நாடகம் தொண்டு கிழவன் இள நங்கையினை மணம் புரிய முயற்சி செய்வதனைக் கேலியும் கிண்டலுமாகப் பேசுகிறது. ஈவிரக்கமற்ற முதலாளியின் ஆணவமும், இரக்கமின்மையும் நகைச் சுவையோடு கிண்டல் செய்யப்படுவதை 'பொறுமை கடலினும் பெரிது' எனும் நாடகத்தில் பார்க்கிறோம்.

தீ மிதி வழிபாடு

தமிழகத்தில் முருகன் கோவில்களிலும், மாரியம்மன் திருவிழாக் களிலும் தீ மிதித்து வழிபாடு செய்வது பழங்காலந் தொட்டு இருந்து வருகின்ற மரபாகும். மரக்கட்டைகளை அடுக்கி அவற்றைக் கொழுந்து விட்டு எரியச் செய்வ . விரதமிருந்து வழிபாடு செய்-வோர், தோளில் காவடி ஏந்தி ஆண்டவனின் மூலத்தானத்திற்கு முன்னர் எரியும் அந்நெருப்பின் மீது விரைந்து நடந்து சென்று காவடியினை இறக்கி வணங்குவர். மாரியம்மன் திருவிழாக்களில் தீச்சட்டியினைக் கையிலேந்திச் செல்வதும் ஒரு மரபு. ஆண்டவ னின் அருள் இருப்பதனால்தான் இதனைச் செய்ய முடிகிறது என்பது பலரது நம்பிக்கை. மனோதிடமும், விரைவும் இருந்தால் யாராலும் இதனைச் செய்ய முடியுமெனவே, இதில் தெய்வசக்தி ஒன்று மில்லை என்பது நாத்திக வாதம்.

பிஜித்தீவு ஆஸ்திரேலியாவுக்கு அண்மையில் உள்ளது. இந்தியாவை வெள்ளையர் ஆண்டபோது, இந்திய மக்களைக் குறிப்பாகப் பற்பல தமிழ்க் குடும்பங்களை அங்கு குடியேற்றினர் அந்-நாட்களில் பிஜித்தீவின் கரும்புத் தோட்டங்களில் தமிழர்கள் குறைந்த ஊதியத்தில் கடுமையாக உழைத்து அல்லற் பட்டதனை பாரதி யின் கவிதையில் கூடக் காணுகிறோம் இந்தத்தீ மிதி வழக்கம்அங்கும் நிலவியிருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. ஆனால் ஒரு ஜெர்மன் விஞ்-ஞானி 1974-ஆம் ஆண்டு நவம்பர் ஆறாம் நாள் பிஜித் தீவில் நடந்த ஒரு தீ மிதி உற்சவத்தை ஆராய்ந்து பார்த்து பௌதிக விஞ்ஞானத் திற்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளது என்பது உண்மையே என்று முடிவுக்கு வந்திருக்கிறார். பிரீத்பர் கார்கர் என்னும் அந்த அறிவியலார், விழா நடத்துவோரின் ஒத்துழைப்போடு கீழ்க்கண்ட வாறு தனது பரிசோதனை யைச் செய்து பார்த்துள்ளார்.

தீ மிதி நிகழ்ந்த இடம் ஒரு பாறை மேலே நெருப்பு எரிகின்றமையால், பாறையின் வெப்ப அளவு அப்போது 340 டிகிரி சென்டிகிரேட். கொதிக்கின்ற பாறையினை மிதிக்கின்றவனின் பாதங்கள் நெருப்பினாலே பாதிக்கப்படுகிறதா என்று தான் கண்டறியப்படவேண்டும். எனவே 70 டிகிரி வெப்பத்திலேயே உருகக்கூடிய ஒரு வண்ணத்தை (பெயின்ட்) அவனது பாதங்களில்

அவர் பூசியிருந்தார். தீ மிதிக்கின்றவன் 11 வினாடிகள் பாறையில் நின்றான். வண்ணம் மாறவில்லை. அவனிடமும் எந்த மாற்றமும் இல்லை. அவன் கீழிறங்கி வந்ததும், அவனது பாதத்திலிருந்து மெல்லிதாகத் தோலைச்சீவி எடுத்து அந்தப் பாறையின் மீது போட்டார் அந்த விஞ்ஞானி, இரண்டு வினாடிகளிலேயே அந்தத் துணுக்குத் தோல் கருகி விட்டது.

இந்த நிகழ்ச்சியினை ஒளிப்படமாக எடுத்துத்தனது நாட்டுக்குக் கொண்டு சென்ற அந்த விஞ்ஞானியின் கருத்து இது தான். அறிவியலுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளது அதனை மானுடம் புரிந்து கொள்ள முடியாதெனவே அதற்கு நாம் தலை வணங்கித்தான் ஆகவேண்டும்

நெல்லிக்காய்-அற்புத மருந்து

இதய நோய் வந்து இறப்போரின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது. உடல் தூய்மையும் மன அமைதியும் நீடித்த வாழ்க்கையினைக் கொடுக்கும் இல்லையாயின் இரத்த அழுத்தம், அதனால் விளையும் தூக்கமின்மை, அசதி ஆகியவற்றின் விளைவாக நெஞ்சுவலி வந்து சேரும் இத்தீய விளைவுக்குக் காரணமாகிய இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் அற்புத மருந்து நெல்லிக்காய். இதனுள் அடங்கிய சி-வைட்டமின் உடலின் கண் உள்ள தசைநார்களைத் தொய்வு அடையாமல் பாதுகாக்கும் தன்மையது. இருமல், சளி பிடித்தல், மூச்சுத் திணறல் ஆகிய சிறு நோய்களையும் நெல்லிக்காய் கட்டுப்படுத்தி விடும். மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவராகக் கருதப்படும் சியவன முனிவர் நெல்லிக் கனியின் அற்புதத்தினை அறிந்தே அதனை மையமாகக் கொண்டு மருந்துகளைச் செய்தார். நெல்லிக்கனியை அதிகமான் ஈந்த அன்பு குறித்து ஔவையார் பாராட்டும் போது, ''பெருமலை விடரகத்து அருவிளைத் தீங்கனி சாதல் நீங்க எமக்கீந்தனையே'' என்று கூறும் புறநானூற்றுப் பகுதியும் ஈண்டு நினைவிற்கொள்ளல் தகும்.

காப்பியின் கதை

தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் காலையில் எழுந்ததும் காப்பி அருந்துவதையும், செய்தித்தாள் படிப்பதையும் இன்றியமையாத கடமையாகக் கருதுகின்றனர். காப்பி, தேயிலை கோக்கோ போன்ற பானங்கள் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவை என்று நம்மில் பலருக்குத் தெரியும். இருப்பினும் அவற்றை காலை, மாலையில் அருந்தும் பழக்கத்தை நம்மால் நிறுத்த முடியவில்லை. மஞ்சட் காமாலை, டைபாய்டு, இரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி ஆகிய நோய்களினால் உடல் நலிவுறும்போது மட்டும் காப்பிப் குடியலை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

கோவையைச் சார்ந்த செடி கொடிச் சித்தரும், மோட்டார் மன்னருமாக விளங்கிய ஜி. டி. நாயுடு மட்டும் தமது வாழ்நாள் முழுதும் காப்பிக் குடியலுக்கு நிரந்தர எதிரியாகவே இருந்தார். காப்பி எத்துணை நச்சுத்தன்மை உடையது என்பதையும் ஒருசிறிய ஆராய்ச்சி மூலம் அவர் நிறுவிக்காட்டினார். ஒரு கோப்பை காப்பியின் நீர்ப்பகுதியை நீக்கி விட்டு அதனுடைய காப்பிப் பொருளை (caffeine) மட்டும் கெட்டியான திரவமாக்கிக் கொண்டார். அதனை ஒரு ஊசியின் மூலமாக தவளையின் உடலில் செலுத்தினார். ஐந்து மணித்துளிகளில் அந்தத் தவளை இறந்து விட்டது ஆயின், அன்றாடம் இரண்டு, மூன்று காப்பிக் கோப்பைகள் பருகும் மனிதன் எப்படி உயிரோடிருக்க முடிகிறது? மனித உடலில் இருக்கும் எதிர்ப்பு சக்திகளே காப்பியின் நச்சுத்தன்மையைப் போக்கடித்து விடுகின்றன. வயது ஆக ஆக, இந்த எதிர்ப்பு சக்தியும் வன்மையும் காலப்போக்கில் குறைந்து போகும் போது காப்பி உடலுக்கு ஒத்துக் கொள்வதில்லை

காப்பிக்குடியல் தமிழகத்துக்கு மட்டும் உரியதல்ல. அமெரிக்கா. ஜப்பான், இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, ஆஸ்திரேலியா ஜெர்மனி, அரேபியா, ஸ்வீடன், டென்மார்க் நார்வே போன்ற நாடுகளிலும் காப்பி குடிக்கும் பழக்கம் உள்ளது. ஆயினும் அதனைக் குடிப்பதிலும் அந்தப்பானத்தைத் தயாரிக்கும் முறையிலும் நாட்டுக்கு நாடு வேறுபாடுகள் உள்ளன. அமெரிக்காவில் காப்பிக் கொட்டையினை அரை வறுவலோடு நிறுத்தி பொடி செய்து கொள்ளுகின்றனர். காப்பிப்பானத்தில் பாலைக் கலப்பதில்லை. அரேபியர்களோ காப்பிக் கொட்டையோடு ஏலத்தையும் சேர்த்து அரைத்துக் கொள்ளுவர்.

காப்பிச்செடி எதியோப்பியா எனும் ஆப்பிரிக்க நாட்டிலிருந்தே பரவிற்று. அந்த நாட்டின் ஒரு பகுதிக்கு 'காப்பா' என்பது பெயர். அங்கிருந்து வந்தமையினால் 'காப்பா' செடி காப்பிச் செடி ஆயிற்று. ஆப்பிரிக்கப் பழங்குடி மக்கள் இக் கொட்டையினை அரைத்து மிருகக் கொழுப்போடு கலந்து சிறு உருண்டையாகச் செய்து பச்சையாகவே உண்ணும் பழக்கத்தை மேற் கொண்டிருந்தனர். இருப்பினும் காப்பிப் பொடியினைக் கொதிக்க வைத்து சாறு எடுத்து. பாலுடன் இனிப்பும் கலந்து குடிக்கும் பழக்கத்தை அராபியரே உண்டு பண்ணினர்.

காப்பிக் கொட்டை உண்ணுதற் பொருளாக எப்படி வந்தது என்பதைப்பற்றி ஒரு கதை உண்டு அபிசீனிய நாட்டு ஆட்டிடையன் சிவப்பு நிறமான ஒரு பழத்தைக் கொட்டையுடன் தனது ஆடுகள் சேர்த்து உண்ணுவதைப் பார்த்தான். அப்பழத்தினைத் தொடர்ந்து தின்ற ஆடுகள் மற்றவற்றை விடச்சற்று சுறுசுறுப்பாக ஓடுவது போன்றும் தெரிந்தது. தானும் தின்று பார் தான். தனது எண்ணம் சரியானதே என்று உணர்ந்தான். தனக்காக அன்றாடம் தொழுகை நடத்துகின்ற சாமியாரிடம் இந்த அரிய பண்டத்தைப் பரிசாக எடுத்துச்சென்றான் 'சாத்தானுக்குரிய தீயபண்டம் என்று சொல்லி அந்தப்பழக் கொட்டைகளைச் சாமியார் நெருப்பிலே தூக்கி எறிந்தார். கருகிய வாடையின்றி புதுமையான மணம் வருவதை நுகர்ந்த ஏனைய சாமியார்கள் அதனை நெருப்பிலிருந்து எடுத்து பொடியாகச் செய்தனர். வெந்நீரில் இட்டு அதன் சாற்றினை எடுத்து இனிப்பும் கலந்து அருந்தினர். இந்நிகழ்ச்சியே காப்பி அருந்தும் பழக்கத்துக்குத் தோற்றுவாயாக அமைந்தது.

அபிசீனியாவில் தொடங்கிய காப்பிக்குடியல் அராபிய, ஆங்கில நாடுகளில் பரவிற்று பதினெட்டம் நூற்றாண்டின் இறுதியில் படைக்கப்பட்ட ஆங்கில இலக்கியங்களில் காப்பி அருந்துதலுக்கு இன்றியமையாத இடம் உள்ளது. ஆங்கில உரைநடை இலக்கியம் நகைச்சுவையும், அங்கதமும் கலந்து வெளிவருவதற்கு லண்டன் மாநகரக் காப்பிக் கடைகள் தான் பெரிதும் காரணமாக இருந்தன. இரண்டாம் சார்லசு காப்பிக்கடைகளை மூடிவிடவேண்டும் என்று சொல்லும் அளவிற்கு அவை பெருகி இருந்தன. காப்பிப் பழக்கம் பிரான்சு நாட்டுக்குச் சென்ற போது, அதற்கு முன்னதாகவே புழக்கத்தில் இருந்த ஒயின் விற்பனையை அது பாதித்து விடுமோ என்று திராட்சை வணிகர்கள்

அஞ்சினர். இருப்பினும் காப்பியின் நுழைவினை அவர்களால் தடுக்க முடிந்திலது. காப்பி தேயிலை ஆகிய இரண்டு பானங்களை யுமே அமெரிக்கர்கள் விரும்பி அருந்தினர். 1773-இல் ஆங்கிலேயர் தேயிலைக்குப்போட்ட வரியினை எதிர்த்து அமெரிக்கா போர்க்குரல் எழுப்பியது. வரலாற்றில் அதனை பாஸ்டன் தேநீர் விருந்து என்று குறிப்பிடுவர். அந்தக் காலகட்டத்திற்குப் பிறகு நாட்டுப் பற்றுடைய அமெரிக்கர் தேநீர்ப்பானத்தை நிறுத்தி விட்டு காப்பி யை மட்டும் தான் குடிக்க வேண்டும் என்று முடிவுகட்டினர். அமெரிக்காவில் காப்பிக் குடியல் அதிகமாகப் பரவியதற்கு இதுவும் ஒரு காரணம்.

1670 - ம் ஆண்டில் ஏமன் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த ஒரு அராபிய மவுல்வியே காப்பிக் கொட்டைகளைக் கொண்டு வந்தார். மைசூருக்கு அருகில் சிக்மகளூர் எனுமிடத்தில் தனது குடியிருப்புக்கு அருகிலேயே அவர் அவற்றை விதைத்துப்பயிர் செய்தார். பாபா பூதன் என்னும் அவரது நினைவுநாளை காப்பி விவசாயிகள் இன்னும் அப்பகுதியில் விழாவாகக் கொண் டாடுகின்றனர். இந்தியாவில் விளைவிக்கப்படும் காப்பியின் முக் கால் பங்கு கர்நாடக மாநிலத்தில் விளைவிக்கப்படுகிறது என்பதை ஈங்கு நினைவு கூர்தல் வேண்டும். உலகிலேயே காப்பி விளை விக்கும் குறிப்பிட்ட பதினாறு நாடுகளில் இந்தியா எட்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. உலக முழுதும் விளையும் காப்பியில் மூன்றில் இரண்டு மடங்கினை தென் அமெரிக்க நாடான பிரேஜில் மட்டுமே விளைவிக்கிறது உலகக் சந்தையில் காப்பிக் கொட்டை யின் விலை வீழ்ச்சியைத் தடுப்பதற்காக ஒரு சமயம் தங்களிட மிருந்த உபரிக் காப்பிக் கொட்டைகளை பிரேஜில் நாட்டினர் கடலில் கொட்டினர் என்பது வரலாறு.

ரோபஸ்டா, பீபெரி போன்ற பெயரில் மொத்தம் அறுபத் தேழு வகை காப்பிக் கொட்டைகள் உள்ளன. காப்பிச் செடிகள் தக்க பாதுகாப்புடன் வளர்க்கப்பட்டால் நாற்பது அடி உயரம் வளரக் கூடியன ஆயினும் காப்பிப்பழங்களை வசதியாக நின்று பறிப்பதற்காக அப்போதைக்கப்போது செடியினை வெட்டியும், குறைத்தும் அதனுடைய உயரமான வளர்ச்சியைத் தடுத்து விடு வார்கள். நன்றாகப் பழுத்த காப்பிப்பழங்கள் சிவந்த நிறத்துடன் காணப்படும். சிறுகச் சிறுகப் பறிக்கப்பட்ட பழங்களை நன்றாக உலர்த்தி மேல்தோலை நீக்கிக் கொட்டைகளைப் பிரித்து எடுப்பர். பழங்களைப்பறித்தவுடனேயே மேற்தோலை சிறு இயந்திரங்கள் மூலம் நசுக்கி கொட்டைகளை நீரில் அலசிப் பிரிப்பதும் உண்டு. பதினைந்து ஆண்டுகளே காப்பிச் செடிகள் நல்ல பலனைக் கொடுக்கும்

இந்தியாவில் விளையும் காப்பியில் பெரும் பகுதி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது. உள்நாட்டில் விற்பனை ஆகும் காப்பியின் தரத்தையும், விலையினையும் நிர்ணயிப்பதற்கு இந்திய அரசினர் காப்பி போர்டு எனும் நிறுவனத்தை அமைத்துள்ளனர். நம்நாட்டில் ஒரு கிலோ காப்பிக் கொட்டையின் விலை ரூபாய் பதினைந்து என்றால், வெளிநாடுகளில் அதனை இருபத்தைந்து ரூபாய் அளவில் விற்க முடிகிறது. எனவே அந்நியச் செலாவணியைப் பெறுதற்கு காப்பி ஒரு இன்றியமையாத ஏற்றுமதிப் பொருளாகக் கருதப்படுகிறது —பொறுப்பாசிரியர்,

சிங்கப்பூர்—ஒரு சிறு உலகம்

சீனர்கள், தமிழர், குஜராத்தியர், மலேசியர், ஆங்கிலேயர், அமெரிக்கர் ஆகிய அனைத்து மொழியினரும் இணைந்து வாழும் தீவாகிய சிங்கப்பூரை ஒரு சிறு உலகம் என்றே கூறலாம். கடந்த பத்தாண்டு காலமாக தேர்வு செய்யப்பட்டு பிரதமராகப் பணியாற்றும் லீ குவான் இவ் ஒரு சீனர். ஒழுக்கத்திற்கும், நேர்மைக்கும், கட்டுப்பாட்டுக்கும் தலை வணங்கும் தன்மையர். சிங்கப்பூரின் குடியரசுத் தலைவரோ தேவன் நாயர் கேரளாவிலிருந்து சென்று குடியேறியவர் ஆரம்ப ஆசிரியராகப் பணியாற்றி பின்னர் தொழிற்சங்கத்தலைவரானார் இவரது மனைவி தனலட்சுமி ஒரு தமிழ் பேசும் பெண்மணி இவர்களின் ஒரே மகனுக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் சீனப் பெண்ணொருத்தியை முறைப்படி திருமணம் செய்வித்தனர்.

மதத்துக்கும், மொழிக்கும் அப்பாற்பட்டு செல்வ வளத்தில் கொழித்துக் கொண்டிருக்கும் சிங்கப்பூரின் மக்கட்தொகை 25 லட்சம், ஜப்பானைத் தவிர்த்த ஆசிய நாடுகள் அனைத்திலும் இங்கு தான் தனி நபர் வருமானம் மிகுதி-27,000 ரூபாய். வறுமையும், ஏழ்மையும் இங்கு இல்லை கரிப்புகையினைக் கக்கும் கார்கள் இல்லை பாலுணர்வு தூண்டும் நூல்கள் கிடையாது. பிறமொழிகளைப்போல தமிழிக்கும் உரிய இடம் உள்ளது. ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டினை அங்கு நடத்துவதாக இருந்தனர், சிற்சில காரணங்களினால் தடைப்பட்டு விட்டது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் (தஞ்சாவூர்) காஞ்சிபுரத்தில் 1985 மார்ச் 10,11 தேதிகளில் ஏற்பாடு செய்திருந்த "சைவம்" பற்றிய கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை.

ஒப்பாய்வு — நோக்கில் பாசுபதம், காஷ்மீர் சைவம், வீரசைவம்

—டாக்டர் சித்தலிங்கையா.

சிவபெருமானைப் பரம்பொருளாகக் கொண்ட சமயங்கள் சைவம் என்றே ஏற்றுக் கொள்ளப்பட்டன என்றாலும் அவற்றுள் பல பிரிவுகள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயரால் குறிப்பிடப்பட்டது. திருமூலர், சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்தசைவம் என நான்கு வகைகளைக் கூறுகின்றார்.[1] அவ்வாறே அவர் சித்தாந்தங்கள் ஆறு என்று கூறி அவற்றைப் பாசுபதம, மாவிரதம், காபாலிகம், வாமம், பைரவம், சைவம் என விரிப்பதாகவும் அறிஞர் கூறுவர்.[2] 2 எனவே பரம்பொருள் ஒன்றாகவே அமைந்தாலும் அப்பரம்பொருளுக்குக் கூறப்படும் இயல்பு, செயல், தன்மை முதலியன அதற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு உயிருக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பு இறைவனுக்-கும் உலகுக்கும் உள்ள தொடர்பு, உலகத்தோற்றம் அழிவு முதலிய பல்வேறு செய்திகள் பற்றிய கருத்துக்களால் சமயங்கள் பிரிந்திருப்பதாகத் தோற்றமளிக்கின்றன. இவ்வகையில் சைவ சமயங்களைப் பிரித்துப்பார்க்கின்ற முறை திருமூலர் காலத்திலேயே இருந்தது எனலாம். அவ்வாறு வழக்கிலிருந்த — இப்போதும் - இருக்கும் — மூன்று சமயங்களைப் பற்றி இங்கே காண்போம்.

கி.பி. 14ம் நூற்றாண்டுல் வாழ்ந்த மாதவாச்சாரியர் சர்வதரிசன சங்கிரகம் என்றொரு நூல் எழுதினார்.[3] அவர் தம் காலத்தில் வழக்கிலிருந்த சமயங்கள் அனைத்தின் பெயர்களையும் குறிப்பிட்டு அவற்றின் தத்துவங்களையும் விளக்கிச் சொல்கிறார். அவருடைய

---

1 திருமந்திரம், செய்யுள் 1394—1414.

2. டாக்டர் மா. ராசமாணிக்கனார், சைவசமய வளர்ச்சி, ப.83; ஆனந்தகிரி தமது சங்கரவிஜயத்தில் சைவ, ரௌத்திர, உக்ர, பட்ட, ஜங்கம பாசுபத என்னும் ஆறுவகைச் சைவப் பிரிவுகளைக் குறிப்பிடுகிறார். (தாஸ்குப்தா, இந்தியதத்துவ வரலாறு, பகுதி 5, ப 14.)

3. தாஸ்குப்தா, மேற்கூறிய நூல் ப 4.

4. மேற்கூறிய நூல் ப. 5.

நூலில் இடம் பெறாமல் இருந்தகாரணத்தாலேயே சில சமயங்கள் இருந்ததில்லை என்றும் கொள்வதற்கில்லை. அவர் தமது நூலில் நகுலீசபாசுபதப்பிரிவு பற்றிப் பேசுகையில், பாசுபத சூத்திரம் பற்றிக் கூறுகிறார். அந்தநூலுக்கு 'ராசிகரபாஷியம்' என்றோர் உரை இருந்ததாகவும் குறிப்பிடுகிறார். கவுண்டின்யர் என்பார் எழுதிய பஞ்சார்த்தபாஷியமே அவ்வாறு குறிக்கப்பட்டது போலும்.[4] வாயலீய சம்உறிதை பாசுபத சாத்திரத்தைப் பஞ்சார்த்த-வித்தை என்று கூறுகிறது. அதன் முதல் சூத்திரம் ''அதாத: பசுபதே பசுபதம் யோகிவிதிம் வயாக்யாஸ்யாமஹ:'' என்று தொடங்குகிறது பசுபதி அல்லது சிவனே இந்த நூலின் ஆசிரியர் (யோக-விதி) என்பது இதன் பொருள், சூத சம்கிதையில் (IV 43, 17) நருல என்றோர் இடம் உண்டு என்றும் அங்குள்ள சிவன் நகு-லீசர் என்று அழைக்கப்பட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது. பாசுபத சூத்திரம் 18 ஆசிரியர்களைக் குருமார்களாகக் காட்டுகிறது. (1. நகுலீசம் 2. கௌசிக முதலியோர்.)[5] லகுலிசன் என்பவரே இந்த சமயத்தை நிறுவினார் எனவும், லகுலீசன் என்றால் கையில் தடிகொண்டு நடப்பவர்களின் தலைவன்' எனவும் கூறப்படுவதுண்டு. கி.பி.14ம் நூற்றாண்டைச் சேர்ந்த இராஜசேகரன் என்பவர் நையாயிகர்களைச் சைவர்கள் என்றும், வைசேடிகர்களைப் பாசுபதர்கள் எனவும் தமது நூலாகிய சத்தர்சன சமுச்சயத்தில் கூறுகிறார்.[6] அவர் அதை யோகமதம் என்று குறிக்கிறார். பல்வேறு சைவ ஆகமங்கள், பாசுபத சூத்திரம், போஜனின் தத்துவப்பிரகாசம் ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது பாசுபத மதம். நியாய சூத்திரம் எழுதிய அட்சபாதர் என்பவரே பாசுபத சமயத்தின் அளவைகளை வகுத்ததாக, இராஜசேகரன் குறிப்பிடுகிறார்.[7] பாசுபதர்கள், காட்சி, அநுமானம், எடுத்துக்காட்டு, சாத்திரம் ஆகியவற்றை அளவை-களாக ஏற்றுக்கொள்கிறார்கள். பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோஜனம், திருட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிர்ணயம்,

---

4. மேற்கூறிய நூல் ப, 5,
5. மேற்கூறிய நூல் ப, 6.
6. மேற்கூறிய நூல் ப.9.
7. மேற்படி, ப.45,

வாதம், ஜல்பம், விதாண்டா, ஹேத்வாபாஷ, சலம், ஜாதி, நிக்கிரகஸ்தானம் ஆகிய பதினாறு வகைகளை ஏற்றுக் கொள்கிறார்கள்.[1] உரைநூலாசிரியராகிய கவுண்டின்யர், காரியம், காரணம், யோகம், விதி, துக்காந்தம் (துன்பத்தின்முடிவு) ஆகிய ஐந்து அடிப்படைகளில் பாசுபத தத்துவம் பேசப்படுகிறது என்று கூறுகிறார்.[2]

பாசுபதர்கள், சாங்கியத்தில் உள்ளது போலவே பிரதிருதி, மகத் ஆகியவற்றை ஏற்றுக்கொள்கிறார்கள். ஒருவகை யோக நெறியும் அவர்களுக்கு உடன்பாடே. விடுதலையும் துன்பநீக்கமும் தான் அவர்களுடைய குறிக்கோள். தனிப்பட்ட உயிர் பசு எனப்படும். பாசம் என்பது பந்தமாகும். இறைவன் இந்த உலகின் நிமித்தகாரணன் என்று அவர்கள் கருதுகிறார்கள். இறைவன் கூறிய நெறியைப் பின்பற்றினால், இறையருளால் ஆன்ம விடுதலை ஏற்படுகிறது இந்த முத்தி சிவனருளால் மட்டும் பெறப்படும். பசு, அறிவுடைய எல்லா உயிர்களையும் குறிக்கும் பசுத்துவம் என்பது சக்தியின்மை ஆகும். இதுவே பந்தம் அல்லது பாசம். துக்கத்தினின்று விடுதலை என்பது ஞானத்தினாலோ, வைராக்கியத்தினாலோ, அறநெறியினாலோ தியாகத்தினாலோ பெறப்படுவதில்லை; இறையருளால் மட்டுமே (பிரசாதம்) பெறக்கூடியது என்று குறிப்பிடுகிறார், கவுண்டின்யர்[3] புத்தி, சித்தம், மனம் என்பவை ஒரு பொருட்சொற்கள். மனம் இந்திரியங்களிலிருந்து விடுபடவேண்டும். இறைவனுடன் ஒன்றவேண்டும். இவ்வாறு செய்தால் பாவ புண்ணியங்கள் மறைகின்றன. பழுத்த கனிகள் உதிர்வது போல் உதிர்ந்துவிடுகின்றன. இவ்வாறு சிவனில் மூழ்கிய ஆன்மா செயலற்று நிற்கும் (நிஷ்கார்ய), எனவே நிஷ்கள் என வழங்கப்படும்.[4]

முத்தி நிலையிலும் ஆன்மா சிவமாகிவிடுவதில்லை; ஒன்றிவிடுவதுமில்லை. இடையறாமல் சிவசிந்தனையில் — சிவத்தொடர்பில் — நிற்கும். இதுவே சிவசாயுச்சியமாகும். கன்மம் பயன் விளைப்பதில்லை. இறைவன் ஆணையின்றிக் கன்மம் செயல்பட

1) மேற்படி ப. 45
2) மேற்படி ப. 131
3) மேற்படி ப. 132
4) மேற்படி ப. 140

முடியாது. எல்லாக் கன்மங்களையும் சிவன் களைந்து விடமுடியும். பிறசமயங்களில் பெரிதும் போற்றப்படும் கன்மக் கொள்கை இந்தச்சமயத்தில் அவ்வளவு சிறப்புப் பெறுவதில்லை. மாயையைப் பற்றிய குறிப்பேதும் பாசுபத சூத்திரத்தில் இல்லை.[5]

இவர்கள் தங்கள் உடம்பில் சாம்பலையும் களிமண்ணையும் பூசுவர்; கருப்புடைமைகளை அணிவர்; தலைமயிர் முடியிடாமலும் முடியிட்டும் கொள்வர். ஜபம், தபம் இவற்றில் ஈடுபட்டவர். இவர்தம் முகத்திலும் தோளிலும் தொப்பூழிலும் மார்பிலும் லிங்கமுத்திரை இடம் பெற்றிருக்கும்.[6]

இடத்தாற் பெயர் பெறுவது காஷ்மீர் சைவம். சிவசூத் திரங்களின் அடிப்படையில் தோன்றியது. இச்சமயம் எனலாம். இச்சமயத்தின் நூல்களில் த்ரிக — சாசனம், த்ரிக சாத்திரம் அல்லது த்ரிக என்றே இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. மறை பொருளாக வழிவழியாகவருவது என்பதைக் குறிக்கும் வகையில் 'ரகசிய சம்பிரதாயம்' என்ற பெயரும் உண்டு. இந்த நூல்கள் பொது வகையான சைவத்தைச் சிவசாசனம் அல்லது சிவாகமம் என்று கூறுகின்றன.[7]

கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியிலோ அல்லது ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ இது தோன்றியிருக் கலாம் என்பர் அறிஞர்.[8] எனினும் திருமூலருக்கும் காஷ்மீர சைவத்துக்கும் தொடர்புண்டென்று அறிஞர் கூறலின்,[9] இச்சமயம் ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பே நடைமுறைக்கு வந்திருக்கும் என்று கூறலாம்.

---

5) மேற்படி ப. 142 சிவஞானமுனிவர், பாசுபத சமயத்தில் மாயை, கன்மம் என்றிரண்டு உண்டு என்பர். — பாடியம், ப. 63

6) சைவ சமய வளர்ச்சி, முற்கூறிய நூல், ப. 83

7) ஜகதிச சந்திர சட்டர்ஜி, காஷ்மீர் சைவம், பக். 1 — 2.

8) மேற் படி ப. 3

9) சைவசமய வளர்ச்சி, ப. 78

காஷ்மீர சைசவ நூல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. ஆகம சாத்திரங்கள். 2 ஸ்பந்த சாத்திரங்கள் 3. பிரத்திய பிஞ்ஞா சாத்திரங்கள்.

ஆகம சாத்திரங்கள் :

ஞானம், கிரியை பற்றிக்கூறும் இந்த நூல்கள் ஆசிரியர்-மாணவர் வழியில் பன்னெடுங் காலமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக் கின்றன. இந்த, வகையில், மாலினிவிஜயம் (அல்லது மாலினிவிஜ யோத்தரம்), ஸ்வச்சந்தம், விஞ்ஞான பைரவம், உச்சுஷ்மபைரவம். ஆனந்தபைரவம், மிருகேந்திரம், மாதங்கம், நேத்திரம், நைஷ்வாசம், ஸ்வாயம்புவம், ருத்திரயாமளம் ஆகியவை அடங்கும்.[1] இவையனைத் தும் பன்மை பற்றிப் பேசின என்றும், ஒருமை அல்லது அத்வைதம் பற்றிப் பேசும் சிவ சூத்திரங்கள் பின்னர் எழுந்தன என்றும் கூறப்படுகிறது. இவற்றின் ஆசிரியர் ஈசனே. விருத்தி, பாஸ்கரர் எழுதிய வார்த்திகம், க்ஷேசமராஜர் எழுதிய விமரிசனி என்னும் உரை ஆகியவை இந்த நூலுக்குண்டு. ஸ்பந்த சாத்திரம், ஸ்பந்தகாரிகை எனவும் வழங்கப்படும். இவற்றின் ஆசிரியர் வசுகுப்தர் எனவும். அவருடைய மாணவராகிய கல்லடர் என்றும் இருவகைக் கருத்து களுண்டு. இராமகண்டர் எழுதிய விவ்ருத்தி, உத்பவர் எழுதிய பிரதீபிகா, சேஷமராஜர் இயற்றிய ஸ்பந்த சந்தோஹம், ஸ்பந்த நிர்ணயம் ஆகியவை இந்த வகை நூல்களை விளக்கும் உரை நூல்களாம்.

பிரத்தியபிஞ்ஞா சாத்திரம் : உண்மையான தத்துவநூல் என்று இதனைக் கூறலாம். வசுகுப்தருடைய மாணவர் எனக் கருதப்படும் சித்தசோமாநந்தர் இதனை இயற்றினர். தருக்க முறையில் தமது கொள்கையை நிறுவவும் பிறர்கோள் மறுக்கவும் இயற்றப்பட்ட நூல் இது. இந்தப்பிரிவின் நூல்களில் முதலாவது சிவதிருஷ்டி, காஷ்மீர் சைவத்தின் தத்துவங்களை விளக்கும் நூல் இது. நூலாசிரி யரே இதற்கு உரையும் இயற்றினார்.

சோமாநந்தரின் மாணவராகிய உத்பலர், ஈசுவரபிரத்திய பிஞ்ஞா (அல்லது பிரத்திய பிஞ்ஞா சூத்திரம்) இயற்றினர். காஷ் மீர நாட்டுக்கு வெளியே இதுவே பிரத்தியபிஞ்ஞா தரிசனம் என வழங்கத் தொடங்கியது. மாதவாசாரியர் தமது சர்வதர்சன சங்கிர கத்தில் குறிப்பிடும் நூல் இதுவேயாகலாம்.[2]

---

1. மேற்படி நூல் ப. 8

சித்தாந்தத்தில் கூறப்படும் 36 தத்துவங்களும், அதே பெயர்களுடன் இந்தப்பிரிவிலும் வழங்கப்படுகின்றன.[1]

அத்வைதம் விவர்த்தம் என்று கூறுவதைத்தான் காஷ்மீர சைவம் ஆபாசம் என்று கூறுகிறது ஒரே ஒரு வேறுபாடு. விவர்த்தம் கூறும் தோற்றம் நிலையில்லாதது, உண்மையல்லாதது. ஆபாசம், நிலையானதும் உண்மையானதுமான ஒன்றைக் குறிக்கிறது. அதாவது இவை உண்மைப்பொருளின் வடிவங்கள். உண்மைப்பொருளில் (இறைவனில்) இவை இல்லை எனவே இவை இடம் பெறும் போதும் உண்மைப்பொருள் மாற்றம் உறுவதில்லை. இவை போன்றே பல்வகை மாற்றங்களுக்கு நிலைக்களனாய்த் தான் மட்டும் மாறுதலின்றி நிற்கிறது.[2]

சிவம், சக்தி, சாதாக்கியம், ஈசுவரம், சத்வித்யா, (சுத்த-வித்தை) என்ற ஐந்து தத்துவங்களின் அடிப்படையில் உலகத் தோற்றம் நிகழ்கிறது. இதன்பிறகு வருவதுமாயை. சிவசக்தியின் ஒருகூறான இது மறைத்தலைச் செய்கிறது. காண்பவன், காட்சிப் பொருள் ஆகிய இரண்டின் உண்மை இயல்பையும் இது மறைக்கிறது.[3] இந்த மறைப்பு உறக்கத்தில் ஆழ்த்துகிறது. காலம், நியதி, ராகம், வித்தை, கலை ஆகிய கட்டுக்களைப் பூட்டுகிறது[4] பின்னர் பிரகிருதியும் குணங்களும் அந்தக்காரணங்களும் பிறவும் தோன்று-கின்றன. இவ்வாறு கட்டில் மூழ்கிய உயிர் வினைகளுக்கு இருப்-பிடமாகவும் அமைகிறது. நல்வாழ் தோன்ற, குருவருள் துணை நிற்க, உண்மை நிலையை அஃது உணர்கிறது. காஷ்மீர சைவம் இவ்வாறு அத்வைத நிலையைப்பேசுகின்றது.

வீரசைவம்:

'வீ' இறைவனொடு ஒன்றியிருப்பதாகிய ஞானத்தைக்குறிக்கும் என்றும், 'ர' என்பது அந்த ஞானத்தில் திளைத்து நிற்கும் மனி

---

1) மேற்படிநூல், பக். 48—53
2) மேற்படிநூல் ப 58.
3) மேற்படிநூல் ப. 76.
4) மேற்படிநூல், ப. 83.

உத்பலரே எழுதிய உரை, அபிநவ குப்தர் எழுதிய பிரத்திய பிஞ்ஞாவிமர்சினி (சிற்றுரை, பேருரை) ஆகியவை இதனை விளக்கும் நூல்கள். அபிநவகுப்தர் இயற்றிய தந்திராலோகம் மிகச் சிறந்நூல்.

ஆன்மா, உயிருள்ளவை அனைத்திலும் கரந்திரிப்பது; மாற்ற மில்லாதது. அதற்குச் சைதன்னியம் (சித்) என்றும், பராசம்வித் என்றும், சிவம், பரமசிவம் என்றும் பெயர் உண்டு. உயிர்களின் உள்ளே உறையும் உண்மையாக மட்டுமல்லாது பிறவுயிர்களாகவும் விளங்குகிறது, சித் அதாவது தனித்தும் (வேறாகவும்) உலகாகவும் (உடனாகவும்) இருக்கிறது. உருவமும் பெயரும் பலவாயினும் இறைவன் ஒருவனேயாவான். காலமோ இடமோ அவனைக் கட்டு வதில்லை. எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் அவன், அவற்றைக் கடந்தும் இருக்கிறான் அதாவது இவ்வுலகம் இறைவனின் வடிவமே. அதற்கு வேறு அடிப்படை இல்லை. இறைவனின் இந்தநிலை சக்தி எனப்படும். இது இறைவனின் வேறானதோ, தனித்திருப்பதோ அன்று. அவனுடைய ஆற்றலே அது.

அந்த ஆற்றல் ஐந்துநிலைகளை உடையது. 1) சித்சக்தி - தானே ஒளிர்வது 2) ஆனந்த சக்தி - இன்பமயமாய் இயல்வது. 3) இச்சா சக்தி-சிவனின் சிந்தனை 4) ஞானசக்தி-பொருள்களை இணைப்பது. 5) கிரியசக்தி - வேண்டிய உருவம் பெறுவதும் தொழிற்படுவதும் [3]

இறைவன் கடந்துநின்றநிலையில் சிவனாகவும், உலகம் முழுவதும் கலந்துநிற்குக போது சக்தியாவும் இருக்கிறான். இவ்வாறு சக்தி தோன்றுவது உதயம், உன்மேஷம், ஆபாஸனம் எனப்படுகிறது. இதுவே உலகத்தோற்றமும் இறுதியாகவும் அமைகிறது. இறைவன் தன்னைத்தானே உணர்வது போல்வது தான் உலகத்தோற்றம்.

---

2. மேற்படி நூல் ப. 20.

3. மேற்படிப. 43. 45,

தரைக் குறிக்கும் என்றும் கூறப்படுகிறது. இந்தப் பொருளை ஏற்றுக் கொள்வதனால் அது 'விர' என்றிருக்க வேண்டுமேயன்றி 'வீர' என்றிருக்க முடியாது என்பார். தாஸ்குப்தா.[5]

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படும் ரேவணாசாரியர் இயற்றிய சித்தாந்தசிகாமணி என்னும் வடமொழி நூலே இம்மதத்தைப் பற்றிக் கூறும் முதல் தத்துவநூல் என்று கருதப்படுகிறது. ஆனால் அதற்குமுன்பே வசன சாத்திரங்கள் தோன்றிவிட்டன. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வசவண்ணரும் அல்லாப்பிரவுபும் இந்தச்சமயத்தைப் பரப்புவதற்கு முன்பே இச்சமயம் இருந்தது. திருமூலர் இலிங்கபுராணத்தை விளக்கியுள்ளார்.[6] இதனை வீரசைவர் ஒரு முக்கிய நூலாகக் கொள்வர். எனவே திருமூலர் காலத்திலேயே இச்சமயம் வழக்கிலிருந்தது எனக் கொள்ளலாம். மேலும் அவர், அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என்ற ஆறுவகை இலிங்கங்களைப் போற்றிக் குறிப்பிடுகிறார்.[7] எல்லாவற்றையும் இலிங்கமாகக் காண்பதும் அதனொடு தொடர்புபடுத்திக் காண்பதும் வீரசைவர்களுக்குரிய கருத்தாகும். மேலும் அவர்கள் தம்மை 'இலிங்காயத்துக்கள்' என்று கூறிகொள்கின்றனர். வீரசைவாகமம் (எட்டாம்படலம்), யோகபீடம், மகாபீடம், ஞானபீடம், சோமபீடம் என நான்கு தலைமை மடங்கள் இருந்தன என்றும் அவற்றில் இருந்து கொண்டு ரேவணர், மருளர், வாமதேவர் (ராமதேவர்), பண்டிதாராத்தியர் என்பவர் இம்மதத்தைப் பரப்பினார் என்றும் குறிப்பிடுகிறது.

---

5) மேற்கூறியநூல், ப. 44.
6) திருமந்திரம், செய். 333—338.
7) மேற்படிநூல், செய். 1683—1746. மகேசுவரபூசை என்னும் தலைப்பில் (செய். 1821 — 1830) அவர் அடியார் பெருமையையும் அவர்களுக்கு உணவளிப்பது பற்றியும் கூறுகிறார், மகேசுவரச்கள் என்றதொடர் சிறப்பாக வீரசைவசமயத்தில் பயன்படுத்தப்படுதலாள், இக்குறிப்பும் அந்தச் சமயத்தைப் பற்றியதாக இருக்கலாம்,

காமிகம் முதல் வாதுளாகமம் வரையிலான ஆகமங்களும் புராணங்களும் வீரசைவ தந்திரமும் முதன்மையான நூல்கள் என்றும், அவற்றுள் வீரசைவ தந்திரம் இறுதியானதும் எனவே முன்பு எழுந்த நூல்கள் அனைத்தின் சாரங்களையும் கொண்டதும் ஆகும் என்று சித்தாந்த சிகாமணி ஆசிரியர் குறிப்பிடுகிறார். என்றாலும் ஏறக்குறைய உபநிடதக்காலத்திலேயே இந்தச்சமயத்துக்கான கரு இருந்திருக்கலாம் என்றும், காளிதாசனின் நூல்களில் இதுபற்றிய முறையான ஒரு விளக்கம் காணப்படுகிறது என்றும் தாஸ்குப்தா கருதுகிறார்.[1] கந்தபுராணத்தின் ஒரு பகுதியாகிய சூதசம்கிதையும் இதைப்பற்றிக் கூறுகிறது. என்பது அவர் கருத்து [2] கோரக்கநாதர் இயற்றிய சித்தசித்தாந்தபத்ததி என்ற நூலிலும் இச்சமயக்கருத்துக்களைக் காண்கிறோம்.[3] அல்லமாப்பிரபுவின் வாழ்க்கையைக் கூறும் பிரபுலிங்கலீலை, வசவபுராணம், வரமாகேசுவரர்களானவசவண்ணர், சென்னவசவண்ணர், அல்லமாப்பிரபு, அக்கமாதேவி முதலியோர் இயற்றிய வசனங்கள் ஆகியவற்றில் இச்சமயத்தின் பல்வேறு கருத்துக்கள் விரவியிருக்கக் காண்கிறோம். இவ்வடியார்கள் சிவசரணர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். எனவே இச்சமயத்துக்கான இலக்கியம் சரணசாகித்தியம் (சரணர், இலக்கியம்) என்றே வழங்கப்பட்டது. துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளும் பிறரும் இந்தச்சிவாநுபவங்களைத் தமிழில் தந்திருக்கிறார்கள். மாயிதேவர் என்பவர் அநுபவசூத்திரம் என்ற நூலை இயற்றினார் இது வீரசைவ சமயத்தின் கருத்துக்களைத் தெளிவாகக் கூறுகிறது. குருபரம்பரை, ஸ்தலச்சிறப்பு, லிங்கஸ்தலம், அங்கஸ்தலம், லிங்க சமயோகவிதி, லிக்கார்ப்பண ஸத்பாவ, ஸர்வாங்கலிங்க சாகித்தியம், கிரியாவிஸ்தாரிணி என எட்டுப்பிரிவுகள் இந்த நூலில் உண்டு. ஷட்ஸ்தலம் என்பது முக்கியமான கொள்கைகளுள் ஒன்று. ஆறு ஸ்தலங்கள் என்பது இதன் பொருள். 'ஸ்த' என்பது 'ஸ்தானத்தையும்', 'ல' என்பது அதில் வயிப்பதையும் குறிக்கும்.

---

1. மேற்கூறிய நூல், ப. 46.
2. மேற்படி
3. மேற்படி, ப. 57, 58.
4. மேற்படி, ப. 61.

ஸ்தலம், என்பது சித். ஆனந்தமாயுள்ள இறைவனைக் குறிக்கும். உலகத்தோற்றத்துக்கும் மறைவுக்கும் அவனே அடிப்படை, அதாவது அவனில் தோன்றி அவனில் அழியும். அந்த இறையின் சக்தி தன்னைத்தானே உசுப்பிக்கொள்வதால் பல்வேறு ஸ்தலங்கள் உண்டாகின்றன.

வசவண்ணரின் வசனங்களில் ஷட்ஸ்தல சித்தாந்தம் நிருபிக்கப்பட்டிருக்கிறது. இறைவனிலிருந்து வேறுபட்டு உலகில் பிறந்த மனிதன் குருவின் அருளால் (தீட்சையால்) தனது உண்மை வடிவை அறிந்து கொண்டு இஷ்டலிங்கத்தின் மூலமாய் இறைவனில் ஒன்றிய மனநிலையை (ஐக்கிய பாவத்தை) எட்டுவதற்கு ஆறு படிகள் உண்டு. அவற்றை 'ஸ்தலங்கள் என்று குறிப்பிடுவார்கள். அவற்றைப் பற்றிய தெளிவு ஷட்ஸ்தல சித்தாந்தங்களில் வருகின்றது ஆறு 'அங்கஸ்தலங்கள்'', ஆறு ''லிங்கஸ்தலங்கள்'', அவற்றை இணைக்கும் 'சாதனை' இவையெல்லாம் ஷட்ஸ்தல சித்தாந்தத்தில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

வீரசைவர்களின் உயர் குறிக்கோள்-லிங்க-அங்க சமரசம் ஆகும். மனித உடலை தரித்திருக்கும் இறைவனின் அறிவு அங்கம், மனித உடலில்மட்டும் அடங்கிவிடாது, உலகெங்கும் பரந்து, கடந்து நிற்கும் இறைவனின் தூய வடிவம் லிங்கம். அங்கம் படிப்படியாய் விரிவுபெற்று இலிங்கத்தில் இணையும் நெறியில் ஆறு ஸ்தலங்கள் (படிகள்) உண்டு, பக்தன், மகேசன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், ஐக்கியன்-இவையே அவ்வாறு ஸ்தலங்கள்.

'நம்பிக்கையால் பக்தனாகி, அந்த நம்பிக்கையுள் இருக்கும் நிட்டையால் மகேசனாகி, அந்நிட்டையுள் இருக்கும் மன அமைதியால் பிரசாதியாகி, இந்த அமைதியில் காணும் தன்னநுபவத்தால் பிராணலிங்கியாகி, அத் தன்னுநுபவத்தில் காணும் ஞானத்தால் சரணனாகி, அந்த ஞானம் உண்மையில் சமரசபாவத்தை எட்டினால் அதுவே ''ஐக்கிய ஸ்தலம்'' எனும் பிரபுதேவர் வசனத்தில் ஷட்ஸ்தலங்களின் தெளிவு சுருக்கிக் கூறப்பட்டிருக்கிறது. உலகில் வாழ்ந்தபடியே உலகியல் செயல்களைப் பரமான்மாவோடு இணைத்துக் காண்பது ஷட்ஸ்தல நெறி. இவ்வகையான சாதனைக்குத் துணைபுரியும் 'அஷ்டாவரணம்' எனும் துணைக்கருவிகளும். 'பஞ்சாரம்' என்னும் ஒழுக்கங்களும் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து வீரசைவர்களின் ஒழுக்க, ஆன்மீக நெறிகளையறிந்து கொள்ளலாம். குரு, இலிங்கம், சங்க

மன், பாதோதகம் (திருவடி விளக்கிய நீர்), பிரசாதம், விபூதி, உருத்திராக்கம், மந்திரம் (ஐந்தெழுத்து) இவை 'அஷ்டாவரனங்கள் இலிங்காசாரம், சதாசாரம், சிவாசாரம், பிருத்தியாசாரம் (அடிமை நெறி), கணாசாரம் (திருக்கூட்டத் தொண்டு) இவை பஞ்சாசாரங் கள் (ஐந்து நெறிகள்), பக்தி ஞானம், கிரியைகளின் முழுஇணைப்பு ஷட்ஸ்தல சாதனையின் இரகசியமாகும். தொடக்கத்தில் உள்ள ஸ்தலங்களில் துவைத பாவம்' (இரு வேறுபட்ட தன்மை) எனும் குறிப்பு உண்டு. பிற்பட்ட ஸ்தலங்களில் அத்வைதபாவம் (ஒருமைத் தன்மை) வகித்துக்கொண்டே சென்று இறுதியில் எல்லாம் ஒன்றா யிணைந்து பயனளிக்கின்றன. இவ்வாறு துவைத, அத்துவைதங் களின் இணைப்பு ஷட்ஸ்தல சித்தந்தத்திலுண்டு. சமய வாழ்க்கை யின் சாதனை, நெறிமுறையான வாழ்க்கையின் தூய்மை, தூய-ஞானம், தியாக நோக்குடன் கூடிய போகம், எலலாவற்றையும் வழங்கத்தயாராயுள்ள பக்தி, உள்ளத்தின் உயர்வால் தெய்வீக வாழ்க்கைநெறி. இவையெல்லாம் ஷட்ஸ்தல சித்தாந்தத்தில் இடங் கொண்டிருக்கின்றன.**

லிங்கஸ்தலமும் மூன்றாகக் கொள்ளப்படுகிறது. 1)பாவலிங்கம் இது நிஷ்களம் எனப்படும். உள்ளுணர்வு மூலமாகவே இதனை அறிய முடியும். 2) பிராணலிங்கம் — எண்ணத்தால் அறியப்படுவது. ஆன்மாவே சிவன். அதுவே பிராணலிங்கம். 3) இஷ்டலிங்கம் காலமும இடமும் கடந்தது [1] அவ்வாறே அங்கமும் மூவகைப்பட்டது. 1) யோகலிங்கம்* — யோகலிங்கம் — சிவனுடன் ஒன்றியிருப்பது. 2) போகலிங்கம்—அந்த ஒன்றிப்பில் மகிழ்வது 3) தியாகலிங்கம் பிறப்பிறப் பென்னும் பொய்மையைக் களைவது. முதலாவது சுழுத்தி நிலை என்னும், இரண்டாவது தூக்கநிலை என்றும், மூன்றாவது வழக்குநிலை (ஜாக்கிரம்) என்றும் கூறப்படுகிறது.[2]

---

1. தாஸ்குப்தா, இந்திய தத்துவ வரலாறு, பகுதி5, ப. 62, உலக முழுவதும் பரவியுள்ள சிவன் (விபு) பாவலிங்கம் எனவும் ஆன்மா-வில் கலந்திருப்பவன் (அந்தர் யாமி)பிராணலிங்கம் எனவும் உடலின் மேல் அணிந்திருக்கும் லிங்கம் இஷ்டலிங்கம் எனவும் கூறுவதுண்டு 'கையகத்தான்' என்னும் திருமுறைத் தொடர் இதனை விளக்கும்.
2. மேற்படி நூல், ப 63,

**சித்தலிங்கையா (மொ. பெ.), வசவண்ணர் வாக்கமுது, பக். 10-11.

இறைவன் சச்சிதானந்தன், எல்லையற்றவன், உலகம் அவனில் தோன்றி அவனில் ஒடுங்குகிறது. வேறு காரணங்களும், கருவிகளும், இன்றி உலகம் தோன்றுகிறது. அதாவது இறைவன் தன்னிச்சைப்படி உலகமாக முகிழ்கிறான். கெட்டியான வெண்ணெய் உருகி நெய் ஆவது போல. இதனால் அவன் இயல்பு கெடுவதில்லை அவற்றைக் கடந்துநிற்கிறான். சத், சித், ஆனந்தமாயிருக்கும் தன்மையே சக்தி. பேதாபேதம் என்னும் நிலையை இச்சமயக் கருத்துக்களில் காண முடிகிறது. கடந்து நிற்கும் இறைவன் உலகமாகவும் காட்சியளிக்கிறான். அதாவது நாமாகவும் நாம் காணும் பொருளாகவும் இருக்கிறான். இந்த வகையில் உயிர், இறைவனின் ஒரு பகுதியே. அவ்வித்தை காரணமாகத்தான் உயிர் பிறப்பிறப்புக்களில் சுழல்கிறது. வினைகளின் காரணமாகத் தொழிற்படுகிறது சிவசக்தி காரணமாகப் பஞ்சாசாரத்தை மேற் கொள்கிறது (ஐந்து நெறிகள்) அஷ்டாவரணம் (எட்டுக் கோட்டைகள்) இதற்கு மதில்களாக அமைகின்றன. சிவநெறி சிவசாயுச் சியத்துக்கு வழிகாட்டுகிறது.

வீரசைவ சமயம்—அத்வைத நிலையை சிறப்பாக எடுத்துக்கூறுகிறது. அதனாலேயே அது சக்தி விசிஷ்டாத்வைதம் என்று அழைக்கப்படுகிறது. சைவ சித்தாந்தம் ஆணவம் கர்மம், மாயை என்னும் மூன்று மலங்களைக் குறிக்கிறது. பாசுபதம் காஷ்மீரி சைவம், வீரசைவம் ஆகிய மூன்றுமே ஆணவ மதத்தைப் பற்றி கூறவில்லை. பாசுபதம் மாயையைப் பற்றி ஏதும் சொல்லவில்லை. ஆனால், மற்ற இரண்டு சமயங்களும் 'மாயை சக்தியின் காரியம்' என்றே குறிப்பிடுகின்றன.

இறுதியாக, பாசுபதம், காஷ்மீர சைவம், வீரசைவம் ஆகிய மூன்றும் முறையே பேதம், அபேதம், பேதாபேதம் ஆகியவற்றைக் குறிக்கின்றன என்று கூறலாம்.

துணை நூல்கள்

தமிழ்

1. இராச மாணிக்கனார், டாக்டர் மா., — சைவ சமய வளர்ச்சி ஔவை நூலகம், சென்னை, 1958

2. சிவஞான முனிவர் - மாபாடியம் சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகம், 1936

3. திருமூலர் — திருமந்திரம் — கழகம், 1942

4. சித்தலிங்கய்யா — வசவண்ணர் வாக்கமுது — சாகித்திய அகாடமி, 1972 (மொழி பெயர்ப்பாளர்)

ஆங்கிலம்

1. Chatterjee, Jagdish Chandra — Kashmir Saivism, The Research Department Jammu and Kashmir, 1914

2. Dasgupta, Surendranath — A History of Indian philosophy, Vol, V Cambridge University press, 1962

3. Jayaram, A R — Sri Basaveswara and his contemporaries, Sri Siddaganga mutt, 195.

இராமகிருஷ்ணரும் விவேகாநந்தரும்.

தொடக்கத்தில் இராமகிருஷ்ணரைப் பைத்தியம் என்றே எண்ணினார் நரேந்திரர். விவேகாநந்தர் எனும் பெயர்மாற்றத்திற்கு முன்னர் நரேந்திரர் என்பதே அவர் பெயர். காலப் போக்கில் குருதேவரிடம் நரேந்திரருக்கு மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. கடவுளைக் காணுதற்கு குரு அவசியமா என்று கேட்டுவிட்டு பலவீனத்திற்கு ஆளாகும் தன்மையுள்ள ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு எப்படி தெய்வத்தைக் காட்டமுடியும் என்று வினா எழுப்பியவர் நரேந்திரர். அவர் சேர்ந்திருந்த பிரம்ம சமாஜக் கொள்கைகளினால் இந்த எண்ணம் மேலும் வலுப்பெற்றிருந்தது. குருதேவரைப் பார்த்துப் பழகியதும் கடவுளைக் காட்டக் கூடிய மனிதர்களும் பூவுலகில் உண்டு என்பதை நரேந்திரர் அறிந்து கொண்டார். அவரிடமிருந்த துறவு, தியாகம் ஆகிய குணங்கள் குருதேவரின் தொடர்பினால் மேலும் வலிமை பெற்றன.

9	நீலகேசி (உரையுடன்) —பேரா சக்கரவர்த்தி நயினார் பதிப்பு	848	140
10.	சட்டவியல் — பேரா. மா. சண்முகசுப்பிரமணியம்	416	
	நூலகப்பதிப்பு		92
	மாணவர் பதிப்பு		36
11.	தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் —பேரா. கே.எம். வேங்கடராமையா	564	155

விற்பனைக்கழிவு: அஞ்சல் வழி 25% நேரில் 30%

அஞ்சல் செலவு தனி

பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%

விற்பனையாளர்களுக்குப் பெறும் படிகளுக்கு ஏற்ப / கழிவு உண்டு

தொடர்பு கொள்க: பதிப்புத்துறை இயக்குநர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 613 001

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT SENTAMIL

1. Place of Publication	:	Madurai
2. Periodicity of Publication	:	Quarterly
3. Printer's Name	:	S. Singaram
4. Nationality	:	Indian
5. Address	:	3, Sudalai Muthu Pillai, Street, Madurai
6. Publisher's Name	:	N.S. Muthumalaichamy B.A.B.L.,
7. Nationality	:	Indian
8. Address	:	54, Tamil Sangam Road, Madurai - 1.
9. Editor's Name	:	N.S. Muthumalaichamy B.A.B.L ,
10. Nationality	:	Indian
11. Address	:	54. Tamil Sangam Road, Madurai - 1.
12. Names and addresses of individuals who won the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital	:	Madurai Tamil Sangam, 54, Tamil Sangam Road, Madurai - 625 001

I. N.S. Muthumalaichamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd) N.S. MUTHUMALAICHAMY

DATED : 25-3-1984 SIGNATURE OF PUBLISHER

Maniam Press, Madurai-9.